526

# முக்திபெறும் ரகசியம்.

1916

526
2.16

எழுதியவர்

P. வரதராஜுலு நாயுடு

[illegible]

OFFICE OF THE REGISTRAR OF ...
20 MAY 1916
MADRAS

[illegible] ...பதிப்பிக்கப்பட்டது.

விலை [illegible]

1916.

11.4.83

OFFICE OF THE REGISTRAR OF ...
29 MAY 1916
MADRAS.

# முகவுரை.

526/2.16

1910-வருஷத்தில் "அனுகூலமர்மம்" (Secret of Success) என்ற ஒரு நூல் எழுதி பிரசுரித்தேன். அந்நூலி லிருந்து இப்புஸ்தகத்தில் கண்ட விஷயங்கள் எடுக்கப் பட்டிருக்கின்றன.

ஒருவன் தன் தேசத்தின் முன்னேற்றத்திற்கு உழைப் பதைக் காட்டிலும் மேலானதர்மம் வேறொன்றுமில்லை. 1916-௵ மே-௴ 21, 22, தேதிகளில் திருப்பூரில் கூடிய கோயமுத்தூர் ஜில்லா மூன்றாவது கான்பரன்சு உபசரணை கமிட்டி சேர்மன் ஆக இருந்து ஜில்லாவின் நன்மையைக்கோரி உழைத்த ஸ்ரீமான் க. சுப்பிரமணிய செட்டியார் அவர்களுக்கு ஞாபகார்த்தமாக இந்நூல் பக்தி யுடன் சமர்ப்பிக்கப்பட்டது.

திருப்பூர்,
21-5-1916. } P. வரதராஜுலு நாயுடு.

OFFICE OF THE REGISTRAR OF ... 20 MAY 1916 MADRAS.

# முக்திபெறும் ரகசியம்.

ஒருவர் மூன்று சிறுவர்களுக்கு ஐந்து பைசா கொடுத்து அதை அவர்களுக்குள் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளும்படி சொன்னார். இதைக்கொண்டு எதாவது வாங்குகிறதென்று அச்சிறுவர்கள் தீர்மானித்தார்கள். அம்மூவரில் ஒருவன் ஆங்கிலேயச்சிறுவன். இரண்டாவதவன் ஹிந்து சிறுவன், மூன்றாமவன் பாரசீகச்சிறுவன். ஒருவனுடைய பாஷை மற்றவனுக்குத்தெரியாது. ஆகையால் என்ன வாங்குகிறதென்பதைக் குறித்து அவர்களுக்குள் கொஞ்சம் தொந்தரை ஏற்பட்டது. ஆங்கிலேயச் சிறுவன் "வாடர்மெலன் (தர்பூசனி பழத்திற்கு ஆங்கிலப்பெயர்) வாங்கவேண்டுமென்றான். ஹிந்து சிறுவன் "அது வேண்டாம், எனக்கு ஹிண்வாணு (தர்பூசனிக்கு ஹிந்திபெயர்) தான்வேண்டும்" என்று சொன்னான். பாரசீகச் சிறுவன் "அதுவுங்கூடவேண்டாம். நாமெல்லோரும்(பாரசீக பாஷை) தர்பூஸ்வாங்கலா"மென்று சொன்னான். இதுதான் வாங்குகிறதென்று தீர்மானிக்கிறது வெகு கஷ்டமாய்ப் போய்விட்டது. ஒவ்வொருவனும் தனக்குத் தேவையானதையே வாங்கவேண்டுமென்று சாதித்தான். ஒருவனாவது மற்றவன் சொன்னதைக் கவனித்தவனன்று. அவர்களுக்குள் ஒரு பெருத்த விவாதம் நிகழ்ந்தது. ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொண்டு வீதி வீதியாகச் சுற்றிவந்தார்கள். தற்செயலாய் இம்மூன்று பாஷைகளையும் அறிந்த ஒருவரை அச்சிறுவர்கள் சந்தித்தார்கள். அவர் இவர்களுடைய சண்டையைக் கண்டு வியப்படைந்து, அவர்கள் விவாதத்தைத் தாம்தீர்ப்பதாக ஒத்துக்கொண்டார். சிறுவர்

கள் அவரிடத்தில் அவர்களுடைய வழக்கைத் தெரிவித்து அவருடைய தீர்மானத்தை எல்லோரும் அங்கீகரிப்பதாகச் சொன்னார்கள். அப்பெரியவர் அவர்களிடத்திலிருந்த ஐந்து பைசாவை வாங்கிக்கொண்டு, அவர்களை ஒரு மூலையில் நிறுத்திவிட்டுத்தாமாகவே ஒருபழக்கடைக்குச்சென்று ஐந்து பைசாவுக்கு ஓர் பெரிய தர்பூசனிப்பழம் வாங்கினார் அவர் அதை மறைத்து வைத்துக்கொண்டு, அச்சிறுவர்களை ஒருவன்பின் ஒருவனாக அழைத்தார். முதலில் ஆங்கிலச்சிறுவனை அழைத்து, அவனுக்குத்தெரியாமல் அப்பழத்தை மூன்று துண்டுகளாக அறுத்து. அதில் ஒன்றையெடுத்து அச்சிறுவனுக்குக் கொடுத்து 'இஃதன்றோ நீ உனக்கு வேண்டுமென்றாய்' என்றார். சிறுவன் அதிக சந்தோஷத்துடன் அதைப் பெற்றுக்கொண்டு, தான் வேண்டுமென்றது அதுதான் என்று சொல்லிக் குதூகலத்துடன் சென்றான். பிறகு அக்கனவான் பாரசீகச் சிறுவனைத் தன்னண்டை அழைத்து இரண்டாவது தர்பூசனிப் பழத்துண்டை அவனுக்குத்தந்தார். அச்சிறுவன் அதை வாங்கிக்கொண்டு மெத்தசந்தோஷத்துடன்சென்றான் கடைசியில் அப்பெரியவர் ஹிந்து சிறுவனைக்கூப்பிட்டு, அவனுக்கு மூன்றாம் துண்டை யளித்தார். அச்சிறுவன் அதிகதிருப்தியுடன் சென்றான். இவ்வளவு சச்சரவு எதற்கு? சிறுவர்களுக்குள் இவ்விதத்தப்பெண்ணத்தைக் கொணர்ந்து விடுத்தது எது? கேவலம் நாமங்களே. வேறொன்றுமல்ல. நாமங்களை விட்டு விடுங்கள் நாமங்கள் என்னும் திரைக்குப்பின்னாலே பாருங்கள் ஆ! அம்மூன்று எதிரிடையான பேர்களும் ஒரேவஸ்துவைக் குறிக்கின்றதைப் பாருங்கள்! வாடர்மெலன், தர்பூஜ், ஹிண்டுவானா. இம்மூன்றும் ஏகவஸ்துவைத்தான் குறிப்பிடுகின்றன. இவைகளில் எல்லாம் அடங்கியிருப்பது ஏகவஸ்துவன்றி வேறென்ன? ஒருவேளை இங்கிலாந்தில் வளரும் தர்பூசனி பாரசீகத்தில் வளரும் தர்பூசனியைவிட கொஞ்சம் ஏற்றத்தாழ்வுடையதாயிரு

க்கலாம். இந்திய தர்பூசனிக்கும் இங்கிலீஷ் தர்பூசனிக்கும் யாதோ கொஞ்சம் வித்தியாசம் இருப்பினும் இருக்கலாம். ஆனால் உண்மையைக் கருதும்போது, பழமெல்லாம ஒன்று தானே. அது ஒரேவஸ்துவன்றி வேறல்ல. சிறு வித்தியாசங்களை நாம் அசட்டை செய்து விடலாமன்றோ? அதே மாதிரி, வெவ்வேறு சம்பிரதாயத்தாருடைய சண்டைச் சரவுகளையும், தப்பெண்ணங்களையும், தாக்கங்களையும், கண்டு, நான் வியப்படைகிறேன். கிறிஸ்தவர்கள் யூதர்களோடு சண்டையிடுகின்றார்கள். யூதர்கள் மகம்மதியரிடத்தில் விரோதம பாராட்டுகிறார்கள். மகம்மதியர்கள் பிராமணரை எதிர்க்கின்றார்கள். பிராமணர்கள் பௌத்தர்களிடத்தில் குற்றம் கண்டு பிடிக்கப் பார்க்கின்றார்கள். பௌத்தர்கள் பிராமணர்களை குற்றஞ்சாட்டுகின்றாரகள். இவைகளையெல்லாம் பார்க்க வெகு வியப்பாகத்தானிருக்கின்றது. இவ்வவு சண்டைகளுக்கும், தப்பெண்ணங்களுக்கும் ஆதிகாரணமாயிருப்பது கேவலம் நாமங்களன்றோ? நாமங்களாகிய திரைகளை தூர எறிந்துவிடுங்கள். நாமங்களாகிய திரைகளை கிழித்தெறிந்து விடவேண்டும். அத்திரைகளுக்கு பின்னாலே பாருங்கள் இவைகளெல்லாம் எதைக் குறிப்பிடுகின்றதென்பதை கவனியுங்கள். அங்கு வித்தியாசமே இல்லை யென்பதை நீங்கள் தெரிந்துகொள்வீர்கள்.

நான் அடிக்கடி 'வேதாந்தம்' என்னும் பதத்தை உபயோகிக்கின்றேன். அது ஒரு பெயர். இப்பெயர்தான் சில ஜனங்களை நான் போதிப்பதைக் கேட்பதினின்று தடுக்கின்றது. ஒருவர் புத்தர் பெயரால் பிரசங்கிக்கின்றார்.

அநேகருக்கு அவர் பிரசங்கிப்பதைக்கேட்க பிரியமிருக்கிறதில்லை. ஏனென்றால் அவர்கள் செவிகளுக்கு இனிமையாயில்லாத ஓர் நூதனபெயரால் அவர் பிரசங்கிப்பதினாலேயாம். தயவுசெய்து அதிக விவேகமுள்ளவர்களாயிருங்கள். இவ்விருபதாம் நூற்றாண்டில், நாமங்களுக்கு மேல் பகிளம்

வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. நான் உங்களுக்குக் கொண்டுவருவதையாகிலும் சரியே, அல்லது வேறெவர் கொண்டு வருவதையாகிலும் சரியே, அதினுடைய யோக்கியதையைத்தெரிந்தே நீங்கள் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். வீண்பேர்களால் கலக்கமடையவேண்டாம். பெயர்களால் வழிதப்பி நடக்கக்கூடாது. ஒவ்வொன்றையும் சோதித்துப் பாருங்கள். அது பிரயோஜனமற்றதா அல்லவா வென்பதை கவனியுங்கள். புராதனமானதென்று ஒரு மதத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாது. புராதனமான மதமானதனால், அது உண்மையானதென்பதற்கு ருஜுவன்று. சில சமயங்களில் நாம் பழம் வீடுகளை இடித்துப்போடுகிறோம். அதிக பழைய வஸ்திரங்களை மாற்றிவிட்டு, நாம் புது வஸ்திரங்களை தரித்துக்கொள்ளுகிறோமல்லவா! நவீனமானதொன்று காரணவாதத்திற்கு அடுத்ததாயிருக்கும்பட்சத்தில், அதுவே வெகு இலாக்கியமானது. அது காலையில் பறித்த ரோஜாமலருக்கு சமானமானது. வெகு புதியது என்று ஒரு மதத்தை, நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டாம். புதிதாகிய ஒவ்வொன்றும் எப்போதும் மேலானதன்று. ஏனென்றால், அது அதிககாலம் இருந்து சோதனைகளுக்கு ஈடுகொடுத்ததன்று. பெரும்பான்மையோர் ஓர் மதத்தில் நம்பிக்கை வைத்திருக்கின்றார்களென்று, நீங்களும் அதைநம்பிவிடக்கூடாது. ஏனென்றால், பெரும்பான்மையான ஜனங்கள் மூடமதத்தில்-சாத்தானுடைய மதத்தில் நம்புகின்றார்கள். பெரும்பான்மையான ஜனங்கள் அடிமை வியாபாரத்தை சரியென்று எண்ணியிருந்தகாலமு மிருந்ததுண்டன்றோ? ஆகையால், அது ஓர் நல்ல ஏற்பாடென்பதற்கு, இஃது அத்தாட்சியாகுமா? பொறுக்கி யெடுத்த சிலர் ஒருமதத்தில் விசுவாசிக்கின்றார்கள். ஆகையால் நாமும் அதைநம்ப வேண்டுமென்று நினைக்கக்கூடாது. ஏனென்றால், சிறுபான்மையான இவர்கள் சில சமயங்களில் குருட்டுத்தனமாய்தப்பு வழியில் செல்லுகின்றார்கள். முற்றும் துறந்த ஓர் சந்நியாசி

யினிடமிருந்து வந்ததினாலேயே ஒரு மதத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடாது. ஏனென்றால், அப்படித் துறந்த அநேகர் ஒன்றுமறியாதவர்களாயும், மதத்துவேஷமுடையவர்களாயுமிருப்பதை நாம் பார்க்கின்றோம். ஒரு அரசன் போதிப்பதினாலேயே, ஒரு மதத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடாது. ஏனென்றால், பொதுவாக அரசர்கள் ஞானமற்றவர்களா யிருக்கின்றார்கள். உத்தம குணமுள்ள ஒருவனிடத்திலிருந்து வந்ததினாலேயே ஒரு மதத்தை நீங்கள் சரியென்று ஏற்றுக்கொள்ளக்கூடாது. ஏனென்றால், அருமைபெரும் குணங்கள் வாய்ந்தவர்கள் சில சமயங்களில் உண்மையைக்கண்டு பிடிக்கத் தவறிவிடுகின்றார்கள். ஒரு மனிதனுக்கு ஜீரணசக்தி அதிகமாகயிருக்கலாம், ஆனால் ஜீரண செய்கை இப்படி இருக்கிறதென்பது அவனுக்குத் தெரியாமலிருப்பினும் இருக்கலாமன்றோ. ஒரு சித்திரக்காரனை எடுத்துக்கொள்ளும்வாம். ரமணீயமானதும் அதிக வேலைப்பாடமைந்ததுமான ஓர் படத்தை அவன் வரைகிறான். ஆனால் அச்சித்திரக்காரன் அதிக அவலட்சணமானவனாயிருந்தாலுமிருக்கலாமன்றோ? அதிக அவலட்சணமானவர்களாயிருந்தும உயர்ந்த உண்மைகளைத் தெரிவிப்பவர்களாய் இருப்பவர்கள் அநேகர் உளர். சாக்ரடீஸ் (கிரேக்கதத்துவ ஞானி) அப்படிக்கொற்றமனிதனாகத் தானிருந்தார். சர் பிரான்சிஸ் பேகன் இருந்தார் (ஆங்கிலேயர்) அவர் உத்தமமான குணங்கள் வாய்ந்தவரன்று. ஆனால அவர் பெரிய காரியங்களைச செய்தார்.

அநுமான தர்க்கசாஸ்திரத்தையும், உன்னதமான தத்துவஞானத்தையும அவர் உலகத்துக்கு போதித்தார். ஓர் கீர்த்திமானிடத்திலிருந்து உதித்ததினாலே, ஓர் மதத்தை நீங்கள் நம்பிவிடக்கூடாது. ஏனென்றால் சர். ஐசக். நியூட்டன் (ஆங்கிலேய சாஸ்திரி) ஓர் கீர்த்திவானாயிருந்தும், அவர் வெளிச்சத்தைப்பற்றி வெளியிட்ட சக்கதி குற்றமுள்ளதா

யிருக்கிறது. ஒரு மதத்தினுடைய யோக்கியதையை யறிந்தே நீங்கள் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். நீங்களே அதைச் சோதித்துப் பார்க்கவேண்டும். நீங்கள் அதை ஊன்றிப்பார்க்கவேண்டும். உங்களுடைய சுதந்திரத்தை புத்தருக்கும், கிறிஸ்துவுக்கும், மகம்மதுவுக்கும், கிருஷ்ணனுக்கும் விற்ற விடவேண்டாம். புத்தர் அம்மாதிரியாகவும், கிறிஸ்து இம்மாதிரியாகவும். மகம்மது இன்னொருவிதமாகவும், போதித்திருப்பார்களானால். அது அவர்களுக்கு நல்லதாகவும், சரியானதாகவும் இருந்தது. அவர்கள் எல்லாரும் வசித்தகாலங்கள் வேறு. அவர்கள் விசாரங்களை அவர்களே தீர்த்துக்கொண்டார்கள். அவர்களுடைய அறிவைக்கொண்டே அவர்கள் எவற்றையும் தீர்மானித்துக்கொண்டார்கள். அது அவர்களுக்கு அவ்வளவு மேன்மையானதாக விருந்தது. ஆனால் நீங்கள் இக்காலத்தில் வசித்து வருகின்றீர்கள். ஒவ்வொன்றையும் பரிசோதித்து. சரியா அல்லவா என்று உங்களுக்காக, நீங்களே தீர்மானித்துக்கொள்ளவேண்டியவர்களாயிருக்கின்றீர்கள். தன் மூப்புடையவர்களாயிருங்கள். ஒவ்வொன்றையும் உங்கள் அறிவைக்கொண்டே பாருங்கள். உங்கள் முன்னோர்கள் ஒருசம்பிரதாயமுடையவர்களா யிருந்திருப்பார்களானால், அது அவர்களுக்கு தகுந்ததாய் இருந்ததினாலே அவர்கள் அப்படிச்செய்தார்கள். ஆனால் உங்களுக்குவேண்டிய மோக்ஷசாதனங்களை நீங்களே ஏற்படுத்திக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கின்றீர்கள். நீங்கள் மோக்ஷமடைவதற்கு உங்கள் முன்னோர்களால் என்னவாகும்! அவர்களுக்கு கெட்டதாகவோ அல்லது நல்லதாகவோ இருந்த ஒரு சம்பிரதாயத்தை அவர்கள் கைக்கொண்டார்கள். ஆனால் நீங்கள் அடையவேண்டிய மோக்ஷத்திற்காக நீங்களாகவே பாடுபட வேண்டியது அவசியம். உங்களுக்கு முன் எது வந்தாலும் சரி அதைச்சரிவர சோதித்துப் பாருங்கள். ஆனால் உங்களுக்கிருக்கும் சுதந்திரத்தை மாத்திரம் இகழ்ந்து விடாமல் இருங்கள்.

உங்கள் முன்னோர்களுக்கு ஓரேமதம் மாத்திரம் தெரிந்திருக்கலாம், ஆனால் உங்களுக்கோ எல்லாவிதமான உண்மைகளும், எல்லாவிதமான சம்பிரதாயங்களும், எல்லாவிதமான தத்துவ சாஸ்திரங்களும், எல்லாவிதமான சாஸ்திரங்களும் காட்டப்பட்டிருக்கின்றன. ஒருமதத்தை உங்கள் முன்னோர்கள் ஏற்படுத்திவிட்டுப் போனதினாலேயே, அது உங்கள் சமயமாகுமானால், புத்தமதமும் உங்கள் மதமே, வேதாந்தமும் உங்கள் மதமே. ஏனெனில் அவைகளையும் உங்கள் முன்னோர்கள்தானே ஏற்படுத்திவிட்டுப் போயிருக்கின்றார்கள்.

உண்மை யாதானுமொரு புருஷனுக்குச் சொந்தமானதன்று. அது கிறிஸ்துவின் சொத்தன்று. கிறிஸ்துவின் பெயரால் நாம் அதை பிரசங்கிக்கவேண்டிய அவசியமில்லை. உண்மை புத்தருக்குச் சொந்தமானதாகாது. அவர் பெயரால் அதை பிரசங்கிக்கவேண்டிய தேவையேயில்லை. அது மகம்மதுவுக்கு உரித்தானதன்று. கிருஷ்ணனுக்கு உரித்தானதுமன்று, அல்லது யாதானுமொரு புருஷனுக்கு உரித்தானதுமன்று. அது எல்லாருக்கும் உரித்தானது.

உங்களுக்கு முன் யாராயினும் வெயிலில் குளிர்காய்ந்திருப்பார்களானால், இன்று நீங்களும் அப்படிச் செய்யலாமன்றோ? ஊற்றின் குளிர்ந்த ஜலத்தை ஒருவன் குடித்திருந்தால், அதே ஊற்றின் ஜலத்தை நீங்களும் பானம் செய்யலாமன்றோ. எல்லா சம்பிரதாயங்களைப் பற்றியும் உங்கள் நிலை இப்படித்தா னிருக்கவேண்டும். பிறருடைய லௌகிகச் செல்வத்தை அபகரிக்க ஒவ்வொருவனும் தன் உள்ளத்தில் நினைக்கிறான். ஆனால் யாராவது உங்களுக்கு மனப்பூர்வமாய், தத்துவஞான பொக்கிஷத்தைக் கொணர்ந்து தரும்போது—அது லௌகிகச் செல்வத்தைக் காட்டிலும் பதின்மடங்கு சிரேஷ்டமானதென்று தெரிந்திருந்தும்— அதை நாம் குதூகலத்துடன் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களா

யிருந்தும்—அவர்களுக்கு விரோதமாக ஆயுதபாணிகளாய் நிற்கின்றோமே? உங்களுக்கு வேதாந்திகள் என்று பெயரிடும் எண்ணத்துடன், உங்களுக்கு வேதாந்தம் போதிக்க வந்தவனன்று. அந்த எண்ணம் எனக்கு இல்லவேயில்லை. நான் சொல்லுவதை எடுத்துக்கொண்டு அதைப்பற்றி சிந்தியுங்கள். அதை உங்களுக்கே சொந்தமாக்கிக்கொள்ளுங்கள்.

அதற்கு கிறிஸ்து மதம் என்று, வேண்டுமானால் பெயரிட்டுக் கொள்ளுங்கள். பேர்கள் என்னவானாலும் சரியே, அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. நான் உங்களுக்குக் கொண்டுவரும் மதம் விவிலியநூலில் மாத்திரமன்று, புராதன கிரந்தங்களிலும் நவீன விஞ்ஞானம், தத்துவம் முதலியவைகளைப்பற்றிய இலக்கியங்களிலும் காணப்படுகின்றது. என்னுடைய மதத்தை வீதிகளிலும் காணலாம், அது இலைகளின் மேலும் வரையப்பட்டிருக்கின்றது. சிற்றாறும் இதைத்தான் முணுமுணுக்கின்றது, காற்றும் இதைத்தான் இரகசியமாகப் போதிக்கின்றது, உங்கள் நரம்புகளிலும் அது துடித்துக்கொண்டு இருக்கின்றது; அம்மதம் உங்கள் வேலையையும். உயிரையும் பற்றியதாயிருக்கின்றது. அஃது, நீங்கள் ஒரு கோவிலுக்குப்போய் அனுஷ்டிக்கவேண்டியமதம் மாத்திரமன்று, அதை நீங்கள் அனுபோகத்திற்கு கொண்டுவந்து, உங்கள் உலகவாழ்க்கையில் அதன்படி நடக்கவேண்டிய மதம். உங்களுடைய தினநுபவத்திலும், நீங்கள் குளிர்காயும்போதும், நீங்கள் சாப்பிடும் அறையிலும், ஒவ்வொருயிடத்திலும், அதன்படி நடக்கவேண்டியதா யிருக்கிறது. அதை வேதாந்தமென்னும் பெயரால் அழைக்க வேண்டியதில்லை. எப்பெயர் வேண்டுமானாலும் அதற்கு கொடுத்துவிடலாம். 'வேதாந்தம்' என்னும் பதத்திற்கு 'மூலாதாரமான உண்மை' என்று பொருள். உண்மை உங்களுக்கும் உரித்தானது, எனக்கு மாத்திரம் உரித்தானதன்று; அது ஹிந்துக்களுக்கு மட்டும் உரித்தானதன்று, அது யாரானு

மொரு புருஷனுக்கு சொந்தமானதன்று, அது ஒவ்வொரு வருக்கும் உரித்தான பொருளேயாம்.

இந்த வேதாந்தம் எப்படி நம் ஜீவபாதையை யிருது வாக்குகின்றதென்பதைப்பற்றியும், நம் எண்ணங்களை எப் படி மனோகரமாக்குகின்றதென்பதைப்பற்றியும், இப்போது ஆராய்வோம். இன்று உலகவாழ்க்கையில் வேதாந்தம் அல் லது அநுகூலமர்மம் என்னும் விஷயத்தை எடுத்துக்கொள் வோம். அநுகூலமர்மம் என்பது வேதாந்தத்தை உலகவாழ்க் கையில் உபயோகிப்பதுதான். வேதாந்த உலகவாழ்க்கை தான் அநுகூலமர்மம். ஒவ்வொரு சாஸ்திரத்திற்கும் இசை ந்த கலையுண்டு. ஆகையினால் இன்று வேதாந்தத்தின் ஒருபாக மாகிய உலகவாழ்க்கையில் வேதாந்தம் என்னும் விஷயத்தை எடுத்துக்கொள்வோம்.

வேதாந்தம் பூலோகத்திலுள்ளதை யெல்லாம் கெட்ட தென்று கற்பிக்கின்றதென்றும் வேதாந்தம் அசாத்தியமா னதை போதிக்கின்றதென்றும், சோம்பேறித் தனத்தை பிரசங்கிக்கிறதென்றும் சிலர் சொல்லுகின்றார்கள். அவர்களு டைய தர்க்க சாமார்த்தியத்தை தங்களிடமே வைத்துக் கொள்ளும்படி அவர்களை நான் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களுடைய சாமர்த்தியத்தை அவர்கள் பிறர்க்கு விற்க வேண்டியதில்லை. அதை அவர்களே வைத்துக்கொள்ளட்டும். உற்சாகம், சக்தி, பலம் சித்தி இவைகளை வேதாந்தம் கொடு கின்றதா அல்லது வேறேதானுமொன்றைக் கொடுக்கின்ற தா வென்பதை மாத்திரம் கவனிக்கும்படி அவர்களை நான் வேண்டுகிறேன். பாரதர்கள் அதன்படி நடக்கின்றார்களா இல்லையா என்பதைப்பற்றி ஒருவரும் கேட்கவேண்டிய தில்லை. அது பாரதர்களுக்கு மாத்திரம் உரித்தான சொத் தல்லவென்று நான் பரிஷ்காரமாய்ச் சொல்லுகிறேனே. அது உங்கள் ஜன்மசுதந்திரம். அமெரிக்கர்கள் பாரதர்க ளைப்பார்க்கிலும் விசேஷமாக உலகவாழ்க்கையில் வேதாந்திக

ளாய் இருக்கிறார்கள். அதனால்தான் அவ்வழியில் அவர்கள் ஜயசீலராய் விளங்குகின்றார்கள். பாரதர்கள் அப்படியில்லாததினால்தான் பொருளாதார விஷயத்தில் க்ஷீணதசையடைந்திருக்கிறார்கள்.

நான் உங்களுக்கு, புரட்டான வேதாந்தத்தை போதிக்க வந்தவனல்லன். ஆனால் பிரகிருதி தேவியின் ஊற்றுக்கண்களினின்று உற்பவிக்கும் உண்மையான வேதாந்தத்தையே போதிக்கிறேன். வேண்டுமானால் உங்களுடைய தர்க்கசாஸ்திரத்தையும், காரணவாதத்தையும், இவ்விஷயத்தின்மேல் உபயோகித்துப்பாருங்கள். வேதாந்தத்தின் மகிமையையும், அது எப்படி ஒவ்வொரு வழியிலும் ஜயத்திற்கே நம்மை நடத்திச் செல்லுகின்றதென்பதையும், ஒவ்வொருவனும்—அவன் எவ்வளவு அதற்கு விரோதமாயிருப்பினும்—மெதுவாக வேதாந்தவழிக்கே ஊர்ந்து சென்று, அதன் விதிகளை அனுஷ்டிக்கிறானென்பதையும் நீங்கள் தெரிந்துகொள்வீர்கள். அநுகூலமர்மம் பற்பல தன்மையுடைத்து. அநுகூலமர்மத்திற்கு எண்ணிறந்த ஆதாரங்கள் உள. இந்த ஆதாரங்களை ஒன்றன்பின் ஒன்றாய் எடுத்துக்கொண்டு, ஹிந்துசாஸ்திரங்களில் வியாக்யானம் செய்திருக்கிறபடி, வேதாந்தத்திற்கும், அவைகளுக்கும் உள்ள சம்மந்தா சம்மந்தத்தைப் பார்ப்போம்.

அனுகூலத்திற்கு முதல் ஆதாரம்—வேலை, உழைப்பு, எதிர்ப்பு, விடாமுயற்சி, இவைகள் ஜயமடைவதற்கு சாதகமாயிருக்கின்றதென்பது ஓர் பகிரங்கமான இரகசியம்.

'உழைமின், உழைமின்' இதுதான் அநுகூலமடைவதற்கு முதல் ஆதாரம். உழைப்பின்றி நீங்கள் ஒருபோதும் காரியசித்தி யடையவேமாட்டீர்கள். சோம்பலுள்ளவன் "ஜீவியப்போரில்" மாண்டே போவான். அவன் பிழைத்திருக்க முடியாது, அவன் இறந்துதான் போகவேண்டும். வெகு சகஜமாய் வேதாந்தத்திற்கு விரோதமாக கிளம்பும்

ஒரு விஷயம் இங்கு பிரஸ்தாபத்திற்கு வருகின்றது. பந்தமற்றதும், மூவிடமுங் கருதாததும், தூய்மையானதுமான ஆத்மாவுக்கும் ஓயாத வேலைக்கும் எங்ஙனம் ஒப்புரவு ஏற்படக்கூடும்? முற்றும் துறந்துவிட்டு, ஆத்ம சாந்தத்தையும், சமாதானத்தையும், அனுபவிக்கும்படியன்றோ வேதாந்தம் போதிக்கின்றது. அதனாலே சோம்பலும், செயலின்மையுமன்றோ விர்த்தியாகின்றன. துறவின் இயல்பைப்பற்றி பயங்கரமான தப்பெண்ணம் கொண்டவர்களே இப்படிப்பட்ட ஆட்சேபங்களைச் செய்கிறார்கள்.

ஓய்விலா வேலையென்றால் என்ன? வேதாந்தத்தின்படி வேலையென்பதற்கு ஓய்வு என்று பொருள். "வேலையென்பது, ஓய்வு." இது பொய்யாகத்தோற்றும் ஓர் சத்தியமான சங்கதி, திடுக்கிடும்படி செய்யும் சங்கதியாயிருக்கின்றதே! உண்மையான எல்லா வேலையும் ஓய்வு யென்றுதான் வேதாந்தம் கூறுகின்றது.

வேலை செய்வோன் அவன் வேலையை மிக்க கவனத்துடன் செய்யும்போது, அவனை உற்றுநோக்குங்கள். பிறர் கண்களுக்கு அவன் வேலை செய்வதாகத் தோற்றுகின்றானேயொழிய வேறில்லை. ஆனால் உள்ளபடி அவன் வேலை செய்கிறவனல்ல. அவன் நிலைமையிலிருந்து, நீங்கள் அவனை சோதித்துப்பார்க்கவேண்டும். தூரத்திலிருந்து பார்ப்போருக்கு வானவில்லில் அழகான வர்ணங்கள் இருப்பதாகத் தோன்றினும், கிட்ட நெருங்கி பார்க்கும்போது அங்கு அவ்விதமான வர்ணங்களேயில்லை. வீரன்,—உதாரணமாக நெப்போலியன் அல்லது வாஷிங்டன்—ஒரே கவனமாய் யுத்தம் புரியும்போது, அவரை கவனித்துப் பாருங்கள். அவருக்கு சரீரம் தானாகவே தொழில் புரிகின்றது. அவர் மனமெல்லாம் அவ்வேலையிலேயே ஆழ்ந்துகிடக்கின்றது. நான் செய்கிறேன் என்னும் அனுபவிக்கும்—சுயநலம்பாராட்டும்—அகங்காரமே அவரிடம் கிடையாது. இப்படி ஓய்வில்லாமல்

வேலை செய்வதானது, உங்களுக்குத் தெரியாமலே, உங்களை யோகிகளிற் சிறந்தவராகிவிடுகின்றது.

ஓய்விலாவேலைமூலியமாய் இந்த சிறு அகங்காரத்திற்கு மேலே, நீங்கள் கிளம்பவேண்டுமென்று வேதாந்தம் கூறுகின்றது. வேலை செய்கிறேனென்னும் உணர்ச்சியே இல்லாமற் போகும்படி அவ்வளவு ஓய்வில்லாமல் மனதும் தேகமும் ஒன்றுக் உழைக்கவேண்டும். நான் "கவிகட்டுகிறேன்" என்னும் எண்ணமே இல்லாத போது, ஒரு கவி, ஞான அருட்சியுடையவராகி விடுகின்றார். கணித சாஸ்திரத்திலுள்ள கடினமான கணக்குகளைப் போட்டு அனுபோகம் பெற்றிருப்பவர்களைக் கேட்டுப் பாருங்கள். 'நான் இதைச் செய்கிறேன்' என்ற எண்ணமே இல்லாத போதுதான், கடினமான கணக்குகளெல்லாம் போடப்பட்டிருக்கின்றனவென்று சொல்லுவார்கள். எவ்வளவுக் கெவ்வளவு ஒருவன் நான் என்னும் அகங்காரத்தை விலக்குகின்றானோ, அவ்வளவுக்கவ்வளவு மேன்மையான வேலையை அவன் செய்து முடிக்கிறான்.

ஆகையினாலே உண்மையானதும், சொல்வதற் கரிதானதும், வேதாந்தத்தின்படி ஆத்மா அல்லது பிரம்மமாயிருக்கிறதுமான அதற்கு எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்துவிட்டு, உண்மையான வேலையையும் செய்துகொண்டு, நான் என்னும் அகங்காரத்தைவிட்டு விலகும்படியன்றோ வேதாந்தம் உபதேசிக்கின்றது. யோகியாயினும்சரி, தத்துவஞானியாயினும் சரி, கவியாயினும் சரி, சாஸ்திரியாயினும் சரி, யாராயினும் சரி, தன்னை யோகநிலைக்கு உயர்த்திக்கொண்டு, 'நான் என்பதை அறவே மறந்து, வேதாந்தியாயிருக்கும் போதன்றோ, சங்கீத சாகித்தியனான பிரம்மம் அப்படிப்பட்டவனுடைய தேகத்தையும், மனதையும், தம்கையில் எடுத்துக்கொண்டு, அவனை மனோகரமான கீதங்களையும், விசித்திரமான இன்னிசைகளையும் பாடச்செய்கிறார்' ஜனங்கள் அடிக்கடி 'ஆ, அவன் ஞான அருள் பெற்றவன்' என்கிறார்கள்.

ஆனால் 'நான்' அல்லது அவன் 'செய்கிறது' அல்லது 'அனுபவிக்கிறது', என்கிறதே அவனிடம் கிடையா. இதுதான் உலகவாழ்க்கையில் வேதாந்தம்.

உலக வாழ்க்கையில் வேதாந்திகளாயிருப்பதனால் தான் நமக்குத் தெரியாமலே எல்லா ஜயமும் தானாகவே வந்துவிடுகின்றது. யோகம் செய்யும்பொருட்டு நீங்கள் காடுகளுக்குப் போக வேண்டியது அவசியமே இல்லை. நீங்கள் வேலையிலே யமுழ்கி கிடக்கும்போது யோகங்களுக்கெல்லாம் கர்த்தாவாகிய சிவன் நீங்களேதான். வேதாந்தத்தின்படி நீங்கள் சரீரமல்ல. இவ்வுண்மையை நீங்கள் அனுபவத்தில் தெரிந்து கொண்டவுடனே, உங்களுடைய தேகமும் மனதும், இருப்பதே உங்களுக்குத் தெரியாது; உன்னதமான மகிமையும் நீங்களே என்பதையும் தெரிந்துகொள்வீர்கள்.

விளக்கு வேலை இன்னதென்பதைப்பற்றி விஸ்தரிக்கின்றது. ஒரு விளக்கை எடுத்துக்கொள்வோம். அதன் வெளிச்சம் வெகு பிரகாசமாயிருக்கின்றது, கண்களை பறிக்கின்றது, வெகு துலக்கமாயிருக்கின்றது. வெகு அலங்காரமுள்ளதாயிருக்கின்றது. இவ்வெளிச்சத்திற்கு இவ்வளவு பிரகாசமும், மகிமையும் எங்கிருந்து வருகின்றது. தன்னை மறந்து, ஓயாமல் வேலை செய்வதினின்றே! விளக்கு தன் திரியையும் எண்ணெய்யையும் செலவழிக்க பின்வாங்கட்டும், உடனே இருள் மூடிக்கொள்கின்றது, எல்லாம் அபஜயம் தான், ஜயமே கிடையாது. ஜயம் வேண்டுமானால், விளக்கு எரியவேண்டும், எண்ணெய்யையும், திரியையும் மிச்சம் வைக்கக்கூடாது (செலவழிக்க யோசிக்கக்கூடாது), இதைத்தான் வேதாந்தம் போதிக்கின்றது.

நீங்கள் அநுகூலமடையும் பொருட்டும், க்ஷேமமடையும் பொருட்டும், உங்களுடைய தினனுபவச்செய்கைகளில் உங்கள் தேகத்தையும், தசை நரம்புகளையும் எரிக்கவேண்டும். ஞானயோகம் என்னும் அக்கினியில் அவைகளைத் தகனம்

பண்ணுங்கள்; அவைகளை உபயோகிக்கவேண்டுவதவசியம்; உங்கள் தேகத்தையும், மனதையும், நாசமாக்குங்கள்; எப்போதும் கொதித்துக்கொண்டிருக்கும் நிலைமையிலேயே அவைகளை வைக்கவேண்டும்; மனதையும் தேகத்தையும், சிலுவையில் அறையுங்கள்; உழைமின், உழைமின், அப்பொழுதுதான் உங்களினின்று ஒளி பிரகாசிக்கும். எல்லா வேலையும் உங்களிடமிருக்கும் எண்ணெயும் திரியும் எரிவதே தவிர வேறொன்றுமன்று. அதாவது தேகம் மனது இவைகளின் மாயாவிகாரங்களை, தன்னறிவு நிலையில் இருந்துகொண்டு அப்பியாசத்தினால் சூன்யமாக்குங்கள். அவைகளுக்கு மேலே கிளம்புங்கள். அதுதான் வேலையென்கிறேன். இவைகளைக் கீழ்ப்படுத்திவிட்ட பிறகு தான் எல்லாவேலையும் செய்து முடித்ததாகும்.

பாரததேசத்துச் சக்கரவர்த்தியாகிய, மகா அக்பர் கோர்ட்டுக்கு ஹிந்து சகோதரரிருவர் வந்து, தங்களுக்கு எதாவது உத்தியோகம் தரவேண்டுமென்று அவரைக் கேட்டுக் கொண்டார்கள். சக்கரவர்த்தி அவர்கள் யோக்கியதையைப்பற்றி வினவினார். அதற்கு அவர்கள், தாங்கள் யுத்த வீரர்களென்று பதில் அளித்தனர். அவர்களுடைய வீரத்துவத்திற்கு ஒரு அத்தாட்சி காட்டும்படி மகா ராஜா கேட்டார். மகா அக்பர் கோர்ட்டில் இருவரும் முகத்துக்கு முகமாக நின்றார்கள். பிரகாசமானதும், கூர்மையான முனைகளையுடையதுமான அவர்களுடைய வாள்கள் மின்னலைப்போல் ஜ்வொலித்தன. இருசகோதரர்களும் ஒருவனுடைய வாளை மற்றவனுடைய நெஞ்சின்மேல் வைத்தனர். குதூகலத்துடனும், புன்சிரிப்புடனும் ஒருவனையொருவன் குத்திக்கொண்டான். அவர்களுடைய கைகள் நடுக்கமுறவில்லை வாள்கள் அவர்கள் தேகங்களில் பாய்ந்தன. ஆனால் பயமின்றியும், அமைதியாகவும் இருவரும் கிட்ட நெருங்கினார்கள். அவர்கள் தம் நெறியினின்றும் விலகவில்லை. மோக்ஷத்தில் அவர்கள் ஆத்மா

க்கள் ஐக்கியப்பட்டுப் போயின. கொஞ்சமாவது யோசிக்கவில்லை. தேகங்கள் இரத்தம் கக்கிக்கொண்டு கீழேவிழுந்து பூமியில் சந்தித்தன. அவர்களுடைய வீரத்துவத்திற்கு அதிசயிக்கத்தக்கதோர் அத்தாட்சி சக்கரவர்த்திக்கு காட்டினார்களன்றோ? ஆகையால் சுயநலத்தை பரித்தியாகம் செய்தால் தான் உண்மையான வேலை சாத்தியம் என்பதற்கு இஃதோர் நிதர்சனம். தேனீக்கள் கொட்டும்போது அவைகளின் உயிரை அக்கொடுக்கில் வைத்துத்தான் கொட்டுகின்றன. *ப்லேட்டோ சொல்லுகிறார்: "தனக்கு, தானே தலைவனான மனிதன், வீணே, மனோராஜ்ஜியம் செய்கிறான்."

எல்லா செல்வமும், ஜயமும், இப்படி உலகவாழ்க்கையில் வேதாந்தியாயிருப்பதில் தான் உண்டாகின்றன. லௌகிக மனிதனுக்கு யோகங்களிற் சிறந்த யோகம் என்னவெனில், அவன் ஓயாமல் உழைப்பதேயாம். ஒருவன் எப்போது தனக்காக உழைக்கிறதில்லையோ அப்போது அவன் பூலோகத்தில் தொழில் புரிவோருக்கெல்லாம் சிறந்தவனாகி விடுகிறான்.

எந்த விதத்தில், எந்த நிலைமையில் வேலை அநுகூலமாகச் செய்து முடிப்பது சாத்திய மென்று பார்ப்போம். 'உழைமின் உழைமின்' என்று சொல்வது யார்க்கும் எளிதுதான், ஆனால் உழைப்பதோ வெகு கடினம். ஒவ்வொருவனும் சிறந்த சித்திரக்காரன் ஆகிவிடவேண்டுமென்கிறான். ஒவ்வொருவனும் பெரிய சங்கீத வித்வான் ஆகிவிட வேண்டுமென்கிறான். ஆனால் ஒவ்வொருவனும், தான் விரும்பிய வண்ணம் ஆகிவிடுவதைக்காணோமே. உங்களைச் சோம்பலுள்ளவராக்குகின்றது எது? உங்களைக் கஷ்டம் அனுபவிக்கும்படிசெய்வது எது? நீங்கள் வேலைசெய்யப் பிரியப்பட்டும், அப்படிச் செய்யக்கூடாமல் போனதை நீங்கள் கண்டிருக்கிறீர்களல்லவா? சில சமயங்களில் நீங்கள் வேலைசெய்யப் பிரியப்படாமலிருந்தும், மகத்தான வேலையை நீங்கள்

* கிரேக்க தத்துவ ஞானி.

செய்திருப்பதைக் கண்டிருக்கிறீர்களல்லவா? உங்கள் வேலை செய்யும் திறமையை ஆளும்மேலான ஒருவஸ்து இருக்கிறதென்பதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா? அடிக்கடி ஒரு மனிதன், தன்படுக்கையிலிருந்து எழுந்தவுடனே, சொல்வதற்கரிதான, இயற்கையோடொத்த, ஒருவிசேஷ நிலைமையில்தான் இருப்பதைக் காண்கிறான். பேனாவை யெடுத்து எழுத உட்கார்ந்த மாத்திரத்தில் அலங்காரமான கவியோ, தத்துவமோ எழுதிவிடுகிறான். ஒருசித்திரக்காரனுக்கு, அழகான ஒருசித்திரம் வரைய எவ்வளவு முயற்சிசெய்திடினும் அது அவனுக்குசாத்தியப்படாமல் போய்விடுகின்றதன்றோ. ஆனால் அதே சித்திரக்காரன் மற்றொரு காலையில் எழுந்தவுடனே, தனக்குள் ஏதோ ஞான அருள் அமைந்திருப்பதாகக் காண்கிறான். உடனே திவ்யமானதும், வேலைப்பாடமைந்ததுமான ஒரு சித்திரம் எழுதி முடித்துவிடுகின்றான். இப்படி யெல்லாம் நிகழ்வது வாஸ்தவம்தானே?

நம் வேலைசெய்யும் திறமையை யெல்லாம் உயர்ந்த ஸ்தானத்தில் வைக்கும்படியான உயர்ந்த இரகசியம் ஒன்று இருப்பதாக நமக்கு இதனால் தெரிகிறதல்லவா? அந்த உயர்ந்த இரகசியத்தை நீங்கள் கைக்கொண்டால், உங்கள் முழுசக்தியையும் உபயோகித்து, பூர்த்தியானதும், மகத்தானதுமான வேலையை நீங்கள் செய்துவிடுவீர்கள். அந்த பரம இரகசியத்தை வேதாந்தம் உங்களுக்கு வெளியிடுகிறது. அது பிரபஞ்சத்துடன் இசைந்து வாழ்வதே தவிர வேறன்று; அதுதான் பிரம்மத்துடன் இசைந்து வாழ்தல், அதுதான் உங்களில் இருக்கும் ஆத்மா அல்லது பிரம்மத்தில் வசித்தல்; அதுதான் அகங்காரம், சுயநல ஆசைகள், இவைகளைவிட்டு அகலல்; இப்படி உங்களுக்குள் அடங்கியிருக்கும் இரகசியமான சக்தியை உபயோகப்படுத்திக் கொள்வதினால், ஆச்சரியமான வேலையைச் செய்து முடித்துவிடலாம். ஒரு சித்திரக்காரன் வீதி வழியாகப் போகிறான், அங்கே அநேக

ருடைய முகங்களைப் பார்க்கிறான், அப்போது ஒருவனுடைய கண்கள் அவன் மனதைக் கவர்கின்றன. அக்கண்கள் அவனுக்குத்தெரியாமலே, அவன் மனதில் சேகரிக்கப்பட்டுப்போய் விடுகின்றன. அவன் வேறொரு மனிதனைச்சந்திக்கிறான். இப்போது அவன் மோவாய்க்கட்டை அச்சித்திரக்காரனை உறுத்துகின்றது, ஆகையால் அதுவும் அவன் மனதில் பதியப்பட்டுப் போய்விடுகின்றது. கண்களை ஒருவனிடத்திலிருந்தும், மோவாய்க்கட்டையை மற்றொருவனிடத்திலிருந்தும் திருடிக்கொண்டான். வேறொருவன் ஒரு படம் வாங்கும் பொருட்டு இவனுடைய கடைக்கு வருகிறான், படத்தை வாங்கிக்கொண்டு அவன் திரும்பிப்போகிறான், ஆனால் அவன் கூந்தலை அச்சித்திரக்காரன் மனதில் பதிய விட்டுப்போகிறானென்பது அக்கொள்வோனுக்குத் தெரிகிறதில்லை. இன்னொருவன் ஏதோ காரியார்த்தமாக அச்சித்திரக்காரனிடம் வருகிறான். அவன் காரியம் முடிந்து அவன் செல்லும்போது, சித்திரக்காரன் அவன் காதுகளைப் பறித்துக் கொள்ளுகிறான். (காதுகள் சித்திரக்காரன் மனதில் பதிந்துவிடுகின்றன). தனக்குத் தெரியாமலே சித்திரக்காரனுடைய மனது தொழில் புரிகின்றது. பல பேருடைய கண்களையும், மோவாய்க்கட்டையையும், மூக்கையும் சித்திரக்காரன் தனக்கு உரித்தாக்கிக்கொண்டான். இவைகளையெல்லாம் நான் செய்கிறேனென்னும் எண்ணமே அவனிடம் கிடையாது. ஆனால் அவனுக்குத் தெரியாமலே வேலை நடந்துவிடுகின்றது. சில நாட் சென்றபின் சித்திரக்காரன் தான் சித்திரம் வரையும் அறைக்குட்சென்று சித்தானுக்கு முன் உட்காருகிறான். ஆச்சர்யமான ஓர் படம் எழுத வேண்டுமென்கிறான். முன் அவன் மனதில் பதிந்திருந்த கண்களையும், மூக்கையும், கூந்தலையும் ஒரே சித்திரத்தில் அமைத்து வெகு சிலாக்கியமான ஓர் படம் எழுதிவிடுகிறான். அதுபூர்வபடங்களைப்பார்க்கிலும் சிறந்ததாயிருக்கின்

றது. இவ்வழகான சித்திரவேலை எப்படிச் செய்யப்பட்டது? இது ஆளைக் குறித்தவேலையா? இல்லவேயில்லை. அது ஆளைக் குறித்தவேலையன்று 'நான் செய்கிறேன்' என்னும் அகங்காரமில்லாத நிலைமையில் இருந்ததினாலேயே இவ்வேலை செய்யப்பட்டது. சித்திரக்காரன், விநோதம் பாராட்டுவானானால், பேராசைப்படுவானானால், உடனே அவன் மனதின் விழிப்புச் சக்தி காந்தீகரிக்கப்பட்டுப் போய் விடுகிறது. பிறகு வேலை செய்யும் நிலையில் அவன் நிற்கிறதில்லை, அவன் நிறைகுலைந்துப்போகிறான்; அகங்காரமுள்ளவனாகிவிடுகிறான், சுயநலம் என்னும் தூக்க மயக்கத்தில் அகப்பட்டுக்கொள்ளுகிறான். சாந்தமான நிலை அவனை விட்டு விலகிவிட்டது, சர்வ வியாபகத்துடன் இசைந்திருப்பதற்குப் பதிலாக அவனிடம் எல்லைப்படுத்தும் ஆசை யுண்டாகிவிட்டது. பல பெயரிடத்தினின்றும் விஷயங்களைக் கிரகிக்கும் சக்தியை அவன் மனது இழந்துவிட்டது. வேதாந்த வாழ்க்கை போய் விட்டது. அத்துடன் விசித்திரமான சித்திரவேலை செய்யும் திறமையும் அவனிடமிருந்து ஓடிப்போய்விட்டது.

ஆகையினாலே, அகங்காரம் உங்களைவிட்டு நீங்கியதும், சொத்தையும், புஸ்தக உரிமையையும், நீங்கள் துறந்ததுவும், பிறர் தயவு சம்பாதிக்கும் எண்ணத்தை விட்டதும். உண்மையற்றதும், வெளியானதுமான உங்கள் சுய நலத்தை நீங்கள் மறுத்துவிட்டதும், உங்கள் வேலை சிறந்ததாகி விடுகிறதென்பதை நீங்கள் பார்க்கின்றீர்களன்றோ? வேலைக்காக வேலை செய்ய வேண்டு மென்று வேதாந்தம் முறையிடுகின்றது. நீங்கள் காரியசித்தியடைய வேண்டுமானால், அதன் முடிவைப்பற்றியும், பலனைப்பற்றியும் கருதாமல் வேலைசெய்ய வேண்டும். எத்தனமும் முடிவும் ஒன்றாகப் போகட்டும், வேலை மாத்திரம் உங்கள் நோக்கமாக விருக்கவேண்டும். ஆத்மாவில் மாத்திரம் நீங்கள் ஒழிவுள்ளவர்களா யிருக்க வேண்டுமென்று வேதாந்தம் சொல்லுகின்றது உங்கள் அக்

தீராத்மா ஓய்வுள்ளதாக விருக்கட்டும், சரீரம் எப்போதும் வேலை செய்துக்கொண்டே யிருக்கவேண்டும். வேலையை யெல்லாம் கெடுப்பது சுயநலக் கவலைதான். வேலையோடு சம்மந்தப்பட்டிருக்கும் சாந்தம் அல்லது நிர்வாணத்திற்காக நீங்கள் வேலைசெய்யவேண்டும்.

2-ம் உதாரம்—நிஷ்காமபரித்தியாகம். ஒருகுளத்திற்கும், ஒருநதிக்கும் ஓர் சம்வாதம் ஏற்பட்டது. அக்குளம் நதியை நோக்கி பின்வருமாறு சொல்லிற்று:— "நதியே! முட்டாள் தனமாய், நீ உன்னுடைய ஜலத்தையும் சம்பத்தையும் சமுத் திரத்திற்குத் தானம்செய்துவிடுகிறாய்; உன் ஜலத்தை இப்படி வீணேவாரிஇறைக்கவேண்டாம். சமுத்திரம் விசுவாசமற்றது அது தகுதியற்றது. உன்னிடத்திலிருக்கும் பொக்கிஷத் தை யெல்லாம் நீ சமுத்திரத்தில் கொட்டினாலும், அது இன்று இருப்பதுபோல எப்போதும் உப்பாகத்தானிருக்கும் அதுஎப்போதும்கசப்பாகத்தானிருக்கும், அதன் உப்பகுணம். மாறவே மாறாது. "பன்றிகளுக்கு முன் முத்துக்களை வாரி யிறைப்பதில் என்னபயன்" உன் சம்பத்தையெல்லாம்நீவை த்துக்கொள்". இதுதான் உலக அறிவு. இங்கு, மூடிவைக்கரு தும்படியும், பயனுக்காகக் கவலைப்படும்படியும் பயனைநோக் கும்படியும் நதி கற்பிக்கப்படுகிறதன்றோ? ஆனால் அந்நதி ஓர் வேதாந்தி. நதி இவைகளை யெல்லாம்கேட்டுவிட்டுப் பின்வரு மாறுவிடை பகர்ந்தது:—"மாட்டேன், காரியமும், பலனும் எனக்கொருபொருட்டல்ல, ஜயாபஜயம் எனக்குஒருபொருட் டன்று நான்வேலையைநேசிக்கின்றேன், ஆகையால்நான்வேலை செய்யவேண்டும், நான் வேலைக்காக வேலை செய்யவேண்டி யது அவசியம். வேலைசெய்வதுதான் என் நோக்கம், எப் போதும் உழைப்பதுதான் என் உயிர்வாழ்க்கை, ஏனெ னில் என் ஆத்மா சக்தி சொரூபம். ஆகையால் நான் வேலை செய்யவேண்டும் நதி வேலை செய்துகொண்டே தான் வந்தது. பிரவாகக் கணக்காகத் தன் ஜலத்தைக்

கொண்டுபோய் சமுத்திரத்தில் ஊற்றிக்கொண்டே வந்தது. லோபித்தனமுள்ள அக்குளம் மூன்று மாதத்தில் வறண்டு போய்விட்டது. குளம் கெட்டு ஊழலாய்ப் போச்சது. அசுத்தமானவைகளால் நிரம்பப்பட்டு போய்விட்டது. ஆனல் நதி எப்போதும்போல புதிதாயும், சுத்தமாயும் இருந்தது. அதன் வற்ரு ஊற்றுக்கள் காய்ந்துபோகவில்லை. நதியின் ஊற்றுக் கண்களை நிரப்புவதற்குச் சமுத்திரத்தின் மேற் புறத்தினின்றுமெதுவாகவும், சப்தமின்றியும் ஜலம்கொண்டு போகப்பட்டது. பருவக்காற்றுகள் சமுத்திரத்தினின்று மெதுவாகவும், சப்தமின்றியும், ஜலத்தை எடுத்துப்போய், அந்நதியின் ஊற்றை எப்போதும் புதிதாகவேவைத்திருந்தன.

ஆகையினலே, அக்குளத்தின் ஆபாசமான தந்திரத்தை நீங்கள் பின்பற்றக்கூடாதென்று வேதாந்தம் கூறுகின்றது. அச்சிறிய சுயநலப்பிரியமுள்ள குளம் பயனைப்பற்றிக்கவலைப் படுகின்றது. வேலைக்காக மாத்திரம் நீங்கள் வேலைசெய்யுங் கள். வேலைசெய்தே தீரவேண்டும். உங்கள் நோக்கமெல் லாம் வேலையிலேயே இருக்கட்டும். அப்பொழுதுதான் உங்களை அரிக்கிறதும் தொந்திரை செய்கிறதுமான பாசங் களினின்று, உங்களை வேதாந்தம் விடுவிக்கும். வேதாந்தம் போதிக்கும் பாசபந்தமற்றிருப்ப தென்பதற்கு இதுதான் பொருள். பலனைப்பற்ய கவலை உங்களுக்கேன்? பிறரிட மிருந்து ஒன்றையும் நீங்கள் எதிர்பார்க்கக்கூடாது. உங்கள் வேலையைப்பற்றிப்பிறர் நல்லெண்ணம் கொள்ளுகிருர்களோ கெட்டெண்ணம் கொள்ளுகிருர்களோ என்கிற கவலை உங் களுக்கு வேண்டாம் அதைப்பற்றிய சிந்தனையே வேண் டாம். வேலைக்காக வேலை செய்யுங்கள். நீங்கள் இந்தவித மாகத்தான் ஆசைகளினின்றுநீங்கவேண்டியிருக்கிறது. வேலை செய்வதினின்று நீங்கள் நீங்கவேண்டியதில்லை. ஆனல் பலனை எதிர்நோக்கும் அமைதியின்மையினின்று மாத்திரம் நீங்கள் உங்களை விடுவித்துக்கொள்ளுங்கள். இப்படிச்

செய்தால் உங்கள் வேலை எவ்வளவு மகத்தானதாகிவிடுமே.

உங்களைக் கலக்குகிற கோபத்திலிருந்தும், சோதனைகளிலிருந்தும் உங்களைத்தப்புவிக்கும் சிறந்த மருந்து வேலைதான். உண்மையாக வேலை செய்யும்போது ஓர் உறுதியான மகிழ்ச்சியுண்டாகிறது. அதுதான் தன்னைத்தான் அறியும் தீப்பொறி. அது உங்களைத் தூய்மைப் படுத்துகின்றது. அது உங்களை மாசற்றவராக்குகின்றது. அது உங்களை பிரம்மத்தோடு ஒன்றுக்குகின்றது. இந்த ஆனந்தந்தான் வேலை செய்வதினுலுண்டாகும், உத்தமமானதும், உண்மையானதுமான சம்மானம். சுயநலத்தைக்கருதி வேலைசெய்வதில் உங்கள் மனதை செலுத்தி மோக்ஷபொக்கிஷமாகிய, ஆனந்தத்தைக் கொடுக்கும் இதை பழுதாக்கவேண்டாம். லோபத்தனமுள்ள பேராசைகளும், சிறு ஆசைகளும் நாம் விர்த்தியடைவதை விடுத்து நம்மை க்ஷீணதசை யடையும்படி செய்கின்றன. இவ்வெளித் தோற்றமான ஆசைகளெல்லாம் நம் வேலை செய்யும் திறமைக்கு உதவிபுரிவதை விடுத்து ஹானி செய்கின்றன. நாம் உண்மையான வேலைசெய்து அதனுல் உடனே அடையும் சந்தோஷத்தைக் காட்டிலும் மேலான சம்மானம் வேறென்றும் கிடையாது. ஆகையினுலே பற்றில்லா வழியிலே பாடுபடுங்கள். அற்பவிஷயங்களில் தலையிடல் வேண்டாம். நீங்கள் உத்தர வாதமுள்ளவர்களாயிருக்கக்கூடாது. ஒரு சம்மானத்தையும் எதிர்பார்க்கவேண்டாம். இதுதான் உங்கள் நோக்கமாகவிருக்கவேண்டுமென்கிறேன்.

'முதலில் பாத்திரவானுகவிரு, பிறகு ஒன்றை இச்சி' என்று ஜனங்கள் சொல்லுவார்கள். ஆனுல் வேதாந்தமோ 'பாத்திரவானுகமாத்திரம் இரு, ஒன்றை இச்சிக்க வேண்டிய அவசியமே யில்லை' என்கிறது. நீங்கள் பாத்திரவான்களாக மாத்திரம் இருப்பின், கடவுளுடைய தடைப்படாத சட்டத்தின்படி ஒவ்வொன்றும் உங்களுக்கு வந்தே தீரும். விளக்கொன்று எரிந்து கொண்டிருந்தால், அது எரிந்துகொண்டே

போக வேண்டுமே தவிர, பூச்சிகளுக்கு அழைப்பு கடிதம் அனுப்பவேண்டிய அவசியமேயில்லை; பூச்சிகள் தாமாகவே விளக்கண்டை ஓடிவரும். எங்கு பதிதாக ஒரு ஊற்று உண்டாயிருக்கிறதோ அங்கு ஜனங்கள் தாமாகவே செல்லுகிறார்களன்றோ. ஜனங்களை அவ்வூற்று சட்டை பண்ணவேண்டிய அவசியமே இல்லை. சந்திரன் உதயமானால் போதும் சந்திர காந்தியை அனுபவிக்கும் பொருட்டு, ஜனங்கள் தம் வீடுகளை விட்டுத் தாமாக வெளியே வந்து விடுகிறார்கள். உங்கள் தேகம் அற்பமென்று தெரிந்துக் கொள்ளும்வரை, நீங்கள் சர்வசக்தியுள்ள ஆத்மா என்பதை அறியும்வரை, தாக்குங்கள், தாக்குங்கள், உழைமின், உழைமின். இப்படி வெளியான உழைப்பினால், நிர்வாணத்தை நீங்கள் அனுபவிப்பீர்கள். வேலையெனும் சிலுவையில் உங்கள் அகங்காரத்தையும் தேகத்தையும் அறைந்து விடுவீர்களானால், ஜயம் உங்களைத் தேடிவரும், அப்போது உங்களை மதிக்கவரும் மானிடர்களுக்குப் பஞ்சமே இருக்காது. கிறிஸ்து பகவான் தாம் ஜீவனோடிருக்கும் வரை, ஜனங்கள் அவரை ஏற்றுக்கொண்டவர்களன்று. அவர் சிலுவையில் அறைபட்ட பின்னரே ஜனங்கள் அவரைப் போற்றினார்கள்.

உண்மையானது பூமியில் சிதைக்கப்பட்டாலும், மறுபடியும் வெளிக்கிளம்பியே தீரவேண்டும். ஒருவித்து, தான் அழிந்தாலன்றி வளர்ந்து செடியாதல் சாத்தியமன்றன்றோ? ஆகையால் அநுகூலமடைவதற்கு இரண்டாம் ஆதாரம் பரித்தியாகமேயாம்.—சுயநலத்தை நசிக்கிவிடல்—பரித்தியாகம்—செய்துவிடலே. "பரித்தியாகம்" பதத்திற்கு தப்பர்த்தம் செய்துவிடவேண்டாம். தியாகம் என்பதற்கு துறவு என்று பொருளன்று.

ஒவ்வொருவனும் வெள்ளையாயிருக்கவேண்டுமென்கிறான், அழகாயிருக்கவேண்டுமென்கிறான். தேஜஸ் உடையவனாயிருக்க வேண்டுமென்கிறான். எப்படி நீங்கள் பிரகாச

முள்ளவர்களாயிருக்கமுடியும்? என் வஸ்துக்கள் வெண்மையாயிருக்கின்றன? தயவுசெய்து வெள்ளை வஸ்துக்களைப் பாருங்கள். அவைகளை அவ்வளவு வெள்ளையாகச்செய்வது எது? அவைகள் வெள்ளையாயிருப்பதின் மர்மம் பரித்தியாகமே தவிர வேறன்றென்று விஞ்ஞான சாஸ்திரம் கூறுகின்றது சூரிய கிரணத்திலுள்ள ஏழுவர்ணங்கள் பலவேறு வஸ்துக்களின்மேல் விழுகின்றன. சில வஸ்துக்கள் இவ்வர்ணங்களில் பெருபான்மையை கிரகித்துக்கொண்டு ஒன்றை மட்டும் திருப்பி எறிந்து விடுகின்றன. அவ்வஸ்துக்கள், தாம் எவ்வர்ணத்தை தமக்கு வேண்டாமென்று திருப்பி எறிந்து விடுகின்றதோ அவ்வர்ணமுடையதாகத் தோன்றுகின்றன. அந்த யங்கியை (சுட்டிக்காட்டுகிறார்) நீங்கள் சிவப்பு (Pink) வர்ணமுள்ள தென்கிறீர்களன்றோ? ஆனால் உண்மையில் அவ்வங்கிக்கு அவ்வர்ணம் சொந்தமானதன்று. அதனால் கிரகிக்கப்பட்ட வர்ணங்கள்தான், உண்மையாகப் பார்க்குமிடத்தில் அதில் இருக்கின்றன. ஆனால் அங்கியங்கிக்கு அவ்வர்ணங்கள் இருப்பதாக. நீங்கள் சொல்லுகிறதில்லையே.

என்ன ஆச்சரியம்! கறுப்பாயுள்ளவஸ்துக்கள், சூரிய கிரணங்களிலுள்ள எல்லாவர்ணங்களையும் கிரகித்துக்கொண்டுவிடுகின்றன. ஒருவர்ணத்தையும் மிச்சம் விடுகிறதில்லை அவைகள் ஒன்றையும் பரித்தியாகம் செய்வதில்லை, தமக்கு வேண்டாமென்று ஒன்றையும் விட்டுவிடுவதில்லை. ஆகையால் அவைகள் இருளடைந்ததாயும், கறுப்பாயும் இருக்கின்றன. வெள்ளைவஸ்துக்கள் ஒன்றையும் கிரகித்துக்கொள்வதில்லை. அவைகள் ஒன்றுக்கும் சுதந்திரம் பாராட்டுவதில்லை, அவைகள் யாவற்றையும் பரித்தியாகம் செய்துவிடுகின்றன. அவைகள் ஒன்றையும் உரிமையாக்கிக்கொள்ள முயற்சிக்கிறதில்லை, அவைகளிடத்தில் சொந்தம் பாராட்டும் குணமேகிடையாது. ஆகையினாலே அவைகள் வெள்ளையாயும், பிரகாசமாயும், இருக்கின்றன.

அதேமாதிரி, நீங்கள் மகிமையும் செல்வாக்குமுடையவ ராயிருக்கப்பிரியப்படின், உங்கள் உள்ளத்தில்சொந்தம்பாராட் டும் குணமில்லாதவர்களாயிருங்கள். நீங்கள் அதற்கு மேலே கிளம்பவேண்டும். எப்போதும் கொடையாளியாகவே இருக் கவேண்டும். கெஞ்சுகிறதும் எதிர்பார்க்கிறதுமான நிலைமை யில் உங்கள் ஹிருதயத்தை ஒருபோதும் விடக்கூடாது. யா வற்றையும் உரிமைப்படுத்திக்கொள்ளும் குணத்தைவிட்டு தூர விலகுங்கள். உங்கள் சுவாசாசயத்திலுள்ள காற்று முழுதும் உங்களுக்கே சொந்தமென்று நீங்கள் என் பாராட்டவேண்டும். காற்று ஒவ்வொருவனுக்கும் சொந்தம். ஆனால் உங்கள் சுவா சாசயத்திலுள்ள அற்ப அளவுள்ள காற்றுக்கு உரிமைபாராட்டு வதை நீங்கள் விட்டுவிட்டவுடனே, இவ்வாகாயத்திற்கெல் லாம் நீங்கள் பாத்தியஸ்தராகி விடுகிறீர்கள். உங்கள் உரிமை அளவிறந்ததாகி விடுகிறது; உட்கொள்ளுங்கள்! பிரபஞ்சத் திலுள்ள பிராணவாயுவை உட்கொள்ளுங்கள்! உங்களுக்கு செருக்கு வேண்டாம். நீங்கள் அகங்காரமுள்ளவர்களாயி ருக்கக்கூடாது. யாதாயினும் சரியே, அது உங்களுக்கு மாத்திரம் சொந்தமானதென்னும் எண்ணமே வேண்டாம். அது பிரம்மமாகிய உங்கள் மெய்யான ஆத்மாவுக்குத் தான் சொந்தம். சர் ஐசக் நியூடனை எடுத்துக்கொள்வோம். அவர் எதனால், பூலோகத்தில் இவ்வளவு பிரதாபமும் மகிமை யும், பிரகாசமுமுடையவரானார்? அவர் மரணத்தருவாயில், அவர் என்னவிதம் வேலைசெய்துவந்தாரென்பது வெளியா யிற்று. உபசாரமாக, அவரை பூலோகத்தில் ஓர் மகா மேதாவியென்று சொன்னார்கள். அதற்கவர் "இல்லை, இல்லை; என்னுடைய சிற்றறிவு எப்படியிருக்கிறதென்றால், அறிவு எனும் சமுத்திரத்தில் மகாவிசாலமான கரையிலுள்ள சிறு கற்களை ஒருசிறு குழந்தை சேர்ப்பதுபோல் இருக்கிறது" என்றார். அப்பெரியவர் இன்னும் மணலின்மேல் படுத்துக் கொண்டு சிறு கற்களைச்சேர்த்துக்கொண்டேயிருந்தாரன்றோ

ஒன்றையும் உரிமைப்பாராட்டாத—தன்னையே மேன்மைப்படுத்திக் கொள்ளாத—இத்துணிவற்றஇக்குணம் தான் உங்களுடைய சக்தியையும், வேலைசெய்யும் திறமையையும் உன்னதஸ்தானத்தில் வைக்கின்றது. இது தான் வேதாந்தத்தின் இயல்பு.

உங்களுக்கு எல்லாவிதமான ஆசைகளுமுண்டன்றோ! அவ்வாசைகளையெல்லாம் தீர்த்துக்கொள்ளவேண்டுமென்கிறீர்களல்லவா? ஏப்படி ஆசைகளைத் தீர்த்துக்கொள்வதென்பதின் மர்மத்தைத் தெரிந்துகொள்ளுங்கள். பலகணியின் திரையை எப்படி நாம் உயர்த்துகிறோம்? பலகணியின் திரையை நாம் உயர்த்தவேண்டியபோது, அதைக்கீழே இழுக்கிறோம் (கயிற்றை,) உடனே திரைமேலே போய் விடுகிறது. உங்கள் ஆசைகளைத் தீர்த்துக்கொள்வதின் மர்மத்தை இது திருஷ்டாந்தப்படுத்துகிறதென்னலாம். அம்புகள் எப்படி எய்யப்படுகின்றன? வில்லை எடுத்து வளைத்துத்தானே. வில்லை வளைக்காதவரை, அம்பு சத்துருவைப்போய்த் தைக்கிறதில்லை. வில்லின் கயிற்றை எவ்வளவு நீட்டினாலும் (வளைக்காமல்) அம்பு உங்களோடேதான் நிற்கும். நீங்கள் வில்லை வளைத்து விட்டால் தான், அம்பு ஓடி உங்கள் சத்துருவின் நெஞ்சில் தைக்கும். அதேமாதிரி, உங்கள் ஆசைகளை நீங்கள் நீட்டி வைத்துக்கொண்டிருக்கும் வரையில், நீங்கள் ஒவ்வொன்றுக்கும் ஆசைப்பட்டுக்கொண்டேயிருக்கும் வரையில் ஒவ்வொன்றுக்கும் பிரியப்பட்டுக்கொண்டே போகும் வரையில், ஒவ்வொன்றுக்கும் ஆசைப்பட்டு நீங்கள் சஞ்சலப்பட்டுக்கொண்டே போகும்வரையில், அதுபோய் சத்துருவின் ஹிருதயத்தைச் சேராது. அதை விட்டுவிட்டால் மாத்திரம், அது சென்று நீங்கள் கருதிய சத்துருவின் ஹிருதயத்தைத் துளைக்கும். “நீ எப்போது என்னைப்பற்றி நினைக்காமலிருக்கின்றாயோ, அப்போதுதான், என்னை உன்பக்கலில் நீ காண்கிறாய்” நீங்கள் எப்போது, வியப்பானதும், சொல்வதற்கரி

யதுமான எண்ணத்தில் ஆழ்ந்து கிடக்கின்றீர்களோ—அது நம் எல்லோரைக்காட்டிலும் மேலானது.—அப்போதுதான் நீங்கள் என்னைக் காண்கிறீர்கள்" இதைத்தான் வேதாந்தம் போதிக்கின்றது.

இரண்டு சந்நியாசிகள் யாத்திரை புறப்பட்டார்கள். அவர்களில் ஒருவர் பணம் சேர்த்துவைக்கும் வழக்கமுடையவர். மற்றொருவர் துறவி. உடைமை சிரேஷ்டமா, துறவு சிரேஷ்டமா, எனும் விஷயத்தைப்பற்றி தர்க்கம் செய்துகொண்டே, ஒரு ஆற்றைப்போய் அவர்கள் சேர்ந்தார்கள். அப்போது சூரியன் அஸ்தமனமாகிவிட்டான். துறவைப் போதித்து வந்தவரிடமோ பணமில்லை; ஆனல் மற்றவரிடத்தில் பணம் இருந்தது. துறவி "தேகத்தைப்பற்றிய கவலை நமக்கேன்? படகுக்காரனுக்குக் கொடுக்கவோ நம்மிடம் ஐவேஜில்லை. ஆகையால் கடவுளுடைய நாமத்தை பஜித்துக்கொண்டு, இக்கரையிலே இவ்விரவைக் கழித்துவிடலாம்" என்று சொன்னார். அதற்கு அப்பணக்கார சந்நியாசி "நாம் இக்கரையிலேயே தங்கி விடுவோமானல், சமீபத்தில் ஒரு கிராமமுமில்லை, குடிசையுமில்லை, வாய் வார்த்தைக்கு ஒருவரும் இல்லை, மேலும், ஓநாய்கள் நம்மை விழுங்கினலும் விழுங்கிவிடும், பாம்புகள் கடித்தாலும் கடிக்கலாம். குளிரினல் விறைத்துப் போவோம், ஆகையால் அக்கரைக்கு நாம் போய்விடவேண்டும். படகுக்காரனுக்குக் கொடுக்க என்னிடம் பணம் இருக்கிறது. அக்கரையில் ஒரு கிராமம் இருக்கிறது. அங்கு போனல் சௌக்கியமாயிருக்கலாமே" என்று பதிலளித்தார். படகுக்காரன் வந்ததும் படகேறி, ஆற்றைக்கடந்து இருவரும் அக்கரைபோய்ச் சேர்ந்தார்கள். அன்றிரவு, படகுக்காரனுக்கு வாடகை கொடுத்த சந்நியாசி, அத்துறவியை பின்வருமாறு எச்சரித்தார். "பணம் வைத்திருப்பதினல் உண்டாகும் நன்மையைப் பார்த்தீரா? நான் பணம் வைத்திருந்ததினலன்றோ இருவருடைய ஜீவன்கள் இன்று காப்பாற்

தப்பட்டன? ஆகையால், நீர் இனிமேல் துறவைப்பற்றி பிரசங்கிக்கக்கூடாது, நானும் உம்மைப்போல் துறவியாயிருந்திருப்பின், இன்று அக்கரையில், குளிரினால் நாம் மடிந்துப் போயிருப்போம் அல்லது யாதாவது வந்து நம் இருவரையும் கொன்றிருக்குமே." ஆனால் அதற்குத்துறவி "நீ பணத்தை பொருட்படுத்தாது படகுக்காரனுக்கு கொடுத்திருக்காவிட்டால்—பணம் உன்னைவிட்டு நீங்காதிருந்திருக்குமானால்—நாம் இருவரும் அக்கரையில் மடிந்துபோயிருப்போம். ஆகையால் நீ பணத்தை துறந்தினாலன்றோ நாம் க்ஷேமம் அடைந்தோம்" என்றார். பின்னும் அத்துறவி சொல்லலுற்றார்: "என்மடியில் நான் பணம் வைத்திருக்காவிட்டாலும், உன் மடியில் இருந்த பணம் எனதுதானே என் விசுவாசத்தினால் தானே, எனக்காக உன்மடியில் பணம் இருந்தது. இதற்காக நான் ஒருபோதும் கவலைப்படுகிறதில்லை, எனக்கு எப்போது தேவையோ, அப்போது எல்லாம் எனக்கு வந்து சேரும்" உங்களிடம் ஆசைகள் இருக்கும் வரையில் உங்களுக்கு க்ஷேமமில்லை. என்பதை இக்கதை நிதர்சனபபடுத்துகிறதன்றோ? உங்கள் ஆசைகளை விடுங்கள், அவைகளைக் கீழே தள்ளுங்கள், அப்போதுதான் நீங்கள் சலனம் அற்றிருப்பீர்கள், அப்போதுதான் கடைசியான ஆசையனுபவத்தைக் காண்பீர்கள். நீங்கள் உண்மையைக் காணுதவரையில் உங்கள் ஆசைகள் தீராதென்பதை உங்கள் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ, நீங்கள் பிரம்மத்தில் ஐக்கியப்பட்டு போகும் வரையில், உங்கள் ஆசைகள் தீர்வதற்கு காலம் பரிபக்குவமானதன்று.

## அனுகூலமடைவதற்கு மூன்றுவதாதாரம்—அன்பு

அனுகூலமடைவதற்கு மூன்றுவது ஆதாரம் அன்பு, அதுதான் பிரபஞ்சத்துடன் ஒத்து வாழ்தல், அதுதான் சந்தர்ப்பங்களின் தன்மைப்படி வாழ்தல். அன்பென்றால்

என்ன? அது நீங்களும், பிறரும், இன்னும் நீங்கள் சந்திக்கும் ஒவ்வொருவரும் ஒன்று என்று அனுபவத்தில் கண்டு கொள்வதுதான். நீ ஒரு கடைக்காரனுயிருந்து, கொள்வோனுடைய நன்மையை உனதுபோல் பாவிக்காவிடில், நீ விர்த்தியடைய மாட்டாய், உன் வியாபாரம் கெட்டுப்போகும். கை, சுயநலத்தைக்கருதி, தன்னைசரீரத்தின்மற்ற அவயவங்களினின்றும் பிரத்தியேகமாக நினைத்துக்கொண்டு, "இதைக்கவனி, வலது கையாகிய நான், எல்லாவிதமான வேலைகளையும் செய்கிறேன். அப்படியிருக்க, நான் படாதபாடுபட்டு சம்பாதிப்பதினுல் சரீரம்முழுவதும் என் ஜீவிக்கவேண்டும்? நான் சம்பாதித்ததை வயிற்றுக்கும் இன்னும் மற்ற அங்கங்களுக்கும் என் கொடுக்கவேண்டும்; இல்லை, இல்லை, எல்லாம் நானே வைத்துக்கொள்வேன்" என்று சொல்லி, அந்த சுயநல எண்ணத்தை செய்கையில் காட்டும்பொருட்டு, தான் சம்பாதித்த ஆகாரத்தை தன் (கையின்) தோலுக்குள் துருத்தி வைத்துக் கொள்ள வேண்டுமென்றே? அதனுல் கைக்கு என்ன நன்மை; கை அந்த வழியில் செல்லமுடியுமா? முடியாதகாரியம் ஒரு போதும் முடியாது! ஆமாம்; ஒரு வழியில் மற்ற அங்கங்கள் பார்த்துப் பொறுமைப்படும்படி, அக்கை கொழுத்து விடலாம், கை தானுகவே ஒருகுளவியையோ, பாம்பையோ, தேனீயையோ, எடுத்துவிட்டு கடிக்கவைத்துக்கொள்ளலாம் இந்த விதத்தில் கை ரொம்பவும் கொழுத்துப்போகலாம், வெகு பெரிதாகிவிடலாம். அதனுடைய தன்னயத்தை இவ்வழியில் திருப்தி படுத்திக்கொள்ளலாம்; இவ்விதத்தில் தான் தன் சுயநல தத்துவத்தை, அது நிர்வகித்துக்கொள்ளக் கூடும். இது எவ்வளவு விரும்பத்தகாதது பாருங்கள்! அவ்விதமான திருப்தியையும், ஜயத்தையும் நாம் இச்சிக்கிறோமில்லையே." அது பிணி.

அவ்விதமே, பூலோகமே ஒரு சரீரம் என்பதை நினைவில் வையுங்கள். உங்கள் தேகம் கையைப்போன்றே, விரலைப்

போன்றே, தேகத்தைப்போன்றே இருக்கிறது. நீங்கள் காரியசித்தியை விரும்பின், ஒரேசரீரமாகிய பூலோகத்தினின்று நீங்கள் வேறு என்று கருதக்கூடாது. கை, சுகமடையவேண்டின் அதனுடைய நன்மை தீமையும், தேகத்தின் நன்மை தீமையும்ஒன்றுயென அறிந்துகொள்ளவேண்டுமன்றோ? அதாவது கை, மணிக்கட்டுவரையில்தான், தானென்று நினைக்காமல்; முழுதேகமும் தானேயென்று உணரவேண்டும். தேகம் சாப்பிட்டால் கையும் சாப்பிட்டாற்போல்தான். நீங்கள் இதை அறிந்து, நீங்களும் பிரபஞ்சமும் ஒன்று, நானும்பிரம்மமுமொன்று என்னும் /உண்மைப்படி நடக்காவிட்டால் நீங்கள் அனுகூலமடையவே மாட்டீர்கள். வேறுபாடு எனும் பாம்புச்சட்டையை நீங்கள் போர்த்துக்கொண்டால், சுகஹீனர்களும் வியாதியால் வருந்துகிறவர்களும் ஆய்விடுகிறீர்கள். எல்லாம் நாமே என்பதைக் கண்டுகொண்டவுடனே, நீங்கள் பரிபூரணராகி விடுகிறீர்கள். இதை உணர்ந்தவுடனே, நீங்கள் அனுபவத்திலே வேதாந்திகளாய்விடுகிறீர்கள். இத்தெய்வீகமானதும், உத்தமமானதுமான இவ்வுண்மையை நீங்கள் மீறிநடப்பீர்களானால் இப்பரிசுத்த சட்டத்தை புறக்கணிப்பீர்களானால்—முட்டாள்தனமாய் சுயநலம் பாராட்டிய கையைப்போல், உங்களுடைய தெய்வத் துரோகத்துக்காக நீங்கள் நாசமடைவீர்கள்.

வேட்டைக்காக ஓர் அரசன் காட்டுக்குச் சென்றான். வேட்டையாடும் ஊக்கத்தில் தன் பரிவாரங்களினின்று பிரிந்து போனான். வெயிலின் கொடுமை அதிகமாகவிருந்தபடியால், ராஜனுக்கு தாகவிடாய் உண்டாய்விட்டது. அக்காட்டில் ஓர் பூஞ்சோலை தென்பட்டது. அரசன் அதனுட் சென்றான். ஆனால் அவ்வரசன் வேடன் உடுப்பைத் தரித்திருந்ததினாலும், அத்தோட்டக்காரன் இவ்வரசனை இதற்கு முன் பார்த்ததில்லையாதலாலும், தோட்டக்காரன் அரசனை இன்னானென்று தெரிந்து கொள்ளக்கூடவில்லை. தனக்கு

தாகம் அதிகமாயிருப்பதால், பானம்செய்ய ஏதாவது கொடுக்க வேண்டுமென்று அரசன் தோட்டக்காரனைக் கேட்டுக் கொண்டான். தோட்டக்காரன் சரியென்று சோலைக்குட் சென்று, ஒரு கிண்ணம் நிறம்ப மாதுளப்பழ ரசத்தைப் பிழிந்து, அவ்வரசனுக்குக்கொண்டு வந்து தந்தான். அரசன் அதை ஒரே விழுங்கில் குடித்துவிட்டான். ஆனால் அவன் தாகம் பூராவும் சாந்தமாகவில்லை. இன்னும் கொஞ்சம் ரசத்தைக் கொண்டுவரும்படி அரசன் கேட்க தோட்டக்காரன் தோட்டத்துக்குட் சென்றான். தோட்டக்காரன் தன் முன்னிலையை விட்டு நீங்கியதும், அரசன் தனக்குள் பின் வருமாறு நினைத்தான்; "இப்பூஞ்சோலை அதிக செழிப்புள்ளதாகத் தோற்றுகிறது; அரைநிமிஷத்தில் ஒரு பெரிய கிண்ணம் நிறம்ப திவ்யமான மாதுளைரசம் கொண்டு வந்தானன்றோ? இருக்கட்டும், இவனுக்கு பலமான வருமான வரி விதிக்கவேண்டும்" ஆனால் ஒரு மணிநேரமாகியும் போனவன் திரும்பக்காணேம். ராஜன் ஆச்சரியமடைந்து 'முன்பு நான் கேட்டபோது, அரை நிமிஷத்தில் ஒரு கிண்ணம் நிறம்ப ரசம் கொண்டுவந்தான், ஆனால் இப்போதோ, ஒரு மணி நேரமாகப் பிழிந்தும் இன்னும் கிண்ணம் நிறையக் காணேமே, இதற்கென்னகாரணம்' என்று சொல்லிக்கொண்டான். ஒருமணி நேரம் கழிந்து, கிண்ணத்தை அரசனிடம் அவன் கொண்டு வந்தான். ஆனால் அது நிறைய ரசமில்லை. இதற்குக் காரணமென்னவென்று அரசன் தோட்டக்காரனைக் கேட்டான். அத்தோட்டக்காரரோ ஒருமுனிவர். அவர் சொன்னதாவது "நான் முதல் தடவை ரசம் கொண்டுவரச் சென்றபோது, எமதரசன், நல்லெண்ணம் உடையவராய் விளங்கினூர். ஆனால் நான் இரண்டாவது தபா சென்றபோது எமதரசனின் நல்லெண்ணம் மாறுதல் அடைந்திருக்க வேண்டும், 'மாதுளம்பழங்களில் திடீரென்று உண்டாயிருக்கும் மாறுதலுக்குவேறு காரணங்கள் சொல்ல என்னால் இய

லாது" அரசன் தனக்குள் சிந்தித்துப்பார்த்தான், ஹா! அவர் சொன்னதெல்லாம் சரியாகவே யிருந்தது. அரசன் முதலில் தோட்டத்திற்குட் காலவைத்தபோது, தர்மசிந்தையும் அன்புமுள்ளவனுய் அத்தோட்டத்திலுள்ள ஜனங்கள் பரம ஏழைகள், அவர்களுக்கு உதவிசெய்தல்வேண்டும் என்று நினைத்தான் ஆனல் அப்பெரியவர் கொஞ்ச நேரத்துக்குள் இன்னும் நிறைய மாதுளை ரசம் கொண்டுவரவும், அரசனின் மனம்மாறியதுடன், அபிப்பிராயமும் பேதப்பட்டும்போயிற்று. அரசன் தத்துவத்தோடொத்து வாழ்வதினின்றும் தவறியதானது, தோட்டத்திலுள்ள மாதுளையைத் தாக்கிற்றன்றோ அன்பின் நியாய சாஸ்திரத்தை அரசன் புறக்கணித்த க்ஷணமே, மாதுளைமரங்கள் ரசம்கொடுக்க மறுத்துவிட்டனவன்றோ?

இக்கதை உண்மையாயிருக்கினும் இருக்கட்டும், அல்லது பொய்யாகவிருக்கினும் இருக்கட்டும். அதைப்பற்றி நமக்கு கவலையில்லை. ஆனல் நீஙகள் இயர்கையோடொத்து வாழும் வரையில், உங்கள் மனம் பிரபஞ்சத்துடன் இசைந்திருக்கும்வரையில், எல்லாம் நீங்களே எனும்உணர்ச்சி உங்களுககு இருக்கும் வரையில், சந்தர்ப்பங்களும், சமயங்களும், காற்றுகளும் அலைகளும் கூட உங்களுக்கு சாதகமாயிருக்குமென்னும் உண்மையை மாத்திரம் மறுக்கமுடியாது. இதற்கு மாருக நீங்கள் பேதப்பட்ட க்ஷணமே, உங்கள் நண்பர்களும், உற்ருரும் உங்களுக்கு விரோதமாகத் திரும்புவார்கள், பூலோகமே உங்களுக்கு விரோதமாக ஆயுதபாணியாய் நிற்கும். அன்பின் தெய்வீகப் பிரமாணத்தைத் தெரிந்துகொண்டு, அதன்வழி நடவுங்கள், அனுகூலத்திற்கு உயிராதாரமாயிருப்பது அன்பே.

## அனுகூலத்திற்கு நாலாவது ஆதாரமாயிருப்பது— சித்தஸ்வாதீனம்.

அனுகூலத்திற்கு நான்காவது ஆதாரம் சித்தஸ்வாதீனம். சித்தஸ்வாதீனத்தை எப்படி ஆதரிக்கிறது. "சித்தஸ்வாதீனனாக இரு. பொறுமையாயிரு. தெளிந்த சிந்தையுடையவனாயிரு" என்று சொல்வது மிக எளிதுதான். ஆனால் எல்லாசந்தர்ப்பங்களிலும் சித்தஸ்வாதீனனாயும் பொறுமையாயும், தெளிந்த சிந்தையுள்ளவனாயும் இருப்பது எவ்வளவு கடினம். சித்தஸ்வாதீனனாயிரு என்று சொன்னதினாலேயே அப்படி இருக்கமுடியாது, செயற்கைவிதிகளால் நீங்கள் ஒன்றும் செய்யமுடியாது. அப்படியானால் நாம் சித்தஸ்வாதீனர்களாய் இருப்பது எப்படி? உங்களுடைய குணங்களை ஆண்டு வருகிறது எது? நாம் கேவலமான ஆசைகளை அடையும் போதும், சுயநலம் கருதும் போதும் நாம் சரீரமென்று நினைக்கும் போதும், நாம் நம்முடைய சித்தஸ்வாதீனத்தை இழந்து, மனோற்சாகம் குன்றியவராகி விடுகின்றோமென்று வேதாந்தம் கூறுகின்றது. அப்பொழுதுதான் நாம் நம்முடைய மன நிதானத்தை இழந்து விடுகின்றோம். நம்முடைய வயிறு பிணியுற்று இருக்கும் போதுதான், நாம் வயிற்றைப்பற்றி நினைக்கிறோம். ஜலதோஷம் பிடித்திருக்கும் போதுதான் மூக்கைப்பற்றிய எண்ணம் உண்டாகிறது. கைகுடையும் போதுதான் கையைப்பற்றி நினைக்கிறோம். அதே மாதிரி நமக்கு ஞானமில்லாத போதுதான் சரீரத்தைப்பற்றிய எண்ணம் நமக்கு உண்டாகிறது. சரீரத்திற்கு பெரும் மதிப்பும், சுயநலாபிமானத்திற்குள்ள கவலையுண்டுபண்ணும் கவனமும், விசனகரமான ஞான வியாதியைத் தம்முள் அடக்கிக்கொண்டிருக்கின்றன. சரீரத்தைப்பற்றிய பலஹீன உணர்ச்சி நமக்குண்டான தக்ஷணமே, நாம் ஏடன் (தோட்டத்தில்) இருந்து விழுந்துவிடுகிறோம். வித்தியாசம் எனும் மரத்தை உருசிபார்த்தவுடனே, நாம் மோக்ஷத்திலிருந்து

கீழே தள்ளப்படுகிறோம். ஆனால் நம் தசையை சிலுவையில் அறைவோமானால், நாம் இழந்த மோக்ஷத்தை மறுபடியும் அடையலாம். சரீரத்தைப்பற்றிய கவலையையும், லோபத்தனமுள்ளதும், அற்பமானதும், சயநலம் கருதியதுமான ஆசைகளையும் விட்டொழிந்த நிமிஷமே, நீங்கள் மனநிறையையும், சித்த சுவாதீனத்தையும் பெற்றுவிடலாம்.

ஆகையினாலே, நீங்கள் சித்தஸ்வாதீனத்தை அடையும் பொருட்டு, உங்கள் ஆத்மாதான் உண்மை என்னும் வேதாந்தத்தின் சிறந்த போதனையை நீங்கள் உங்கள் அப்பியாசத்திற்குக் கொண்டுவரவேண்டும். உண்மையான வஸ்துவாகிய ஆத்மாவில் நீங்கள் மூழ்கிக்கிடக்கும்போது, இவ்வெளகிக சந்தர்ப்பங்களெல்லாம் உங்களுக்கு ஒருபொருட்டல்ல. நான் சரீரமல்லேன்; சரீரத்தைப்பற்றிய பொறுப்புகளும், சம்மந்தங்களும், பந்தங்களும், எனக்கு விளையாட்டுக் கருவிகளைப் போன்றவைகளேயாம். அவைகளெல்லாம் நாடகசாலைக்குரிய கரும சம்மந்தங்களே. நான் [illegible]த்தனாகவிருப்பதினால், ஒருவனை எனக்கு சத்துருவாகவும், ஒருவனை மித்திரனாகவும், மற்றொருவனை எனக்குத் தகப்பனாகவும், இன்னொருவனைப் பிள்ளையாகவும் வைத்திருக்கிறேன்; ஆனால் உண்மையில் நான் மகனுமன்று, தகப்பனுமன்று. சத்துருவுமன்று, மித்திரனுமன்று. நான் ஏக பர[illegible]வஸ்து. லெளகீக பந்தங்களும், சம்மந்தங்களும் என் காரியங்களன்று. இச்சம்பந்தங்களெல்லாம் கேவலம் மாயாவிகாரங்களே. நாடகத்தில் தனக்குள்ள பாகத்தை ஒவ்வொருவனும் செய்யக்கடவன். ஆனால் நாடகத்திற்குரிய அன்பு, வெறுப்பு இவைகளை மனத்தில், வைத்தழுத்தி. ஆத்மாப்பியாசம் பண்ணுகிறவன் பைத்தியக்காரனேயன்றி வேறல்லன். இவ்வுலகம் ஓர் நாடகக்காட்சியேயன்றி வேறல்ல; அப்படியிருக்க, வெளித்தோற்றமான ஒப்புக்கடமைகளுக்கு விசேஷ மதிப்பை நான் எதற்காகப் பாராட்டவேண்டும். ஒருவன் அரசனாகவிருப்பின், அவனைப்

பார்த்து நான் என் பொறுமைப்படவேண்டும், மற்றொருவன் பிச்சைக்காரனாகவிருப்பின், அவனை என் எள்ளனம் பண்ணவேண்டும்?

சந்தர்ப்பங்களைப் பற்றி, நீங்கள் சங்கடப்படக்கூடாதென்று வேதாந்தம் போதிக்கின்றது. பிரமாணத்தைத் தெரிந்துகொண்டு எல்லாபயத்தையும் உதறி விடுங்கள். ஒரு நியாயாதிபதியை எடுத்துக்கொள்வோம். அவர் கோர்ட்டுக்கு வந்து தமது ஆசனத்தில் உட்கார்ந்தவுடனே, கட்சிக்காரர்களும், குமாஸ்தாக்களும், வக்கீல்களும், சேவகர்களும், அவருக்காகத் தயாராகக் காத்திருப்பதைக் காண்கிறார். சாட்சிகளையும், வக்கீல்களையும், வாதிபிரதிவாதிகளையும் அவர் கூப்பிடவேண்டியதில்லை. அறைகளைப் பெருக்கி, மேஜை முதலானவைகளை எடுத்துப் போடவேண்டிய வேலையும் அவருக்கில்லை. கதிரவன் முன்னிலையில் எப்படி பிரக்கிருதி தேவி விழித்து, நதிகளும், செடிகளும், பறவைகளும், மிருகங்களும், மனிதர்களும் உற்சாகமடைகிறார்களோ, அதைப்போல நியாயாதிபதியின் அதிகாரம்மாத்திரமே ஒவ்வொன்றையும் ஒழுங்குபடுத்தி விடுகிறது. அதேமாதிரி, நீங்கள் உண்மையில் ஸ்திரமாய் நிற்கும்போது, கவலையற்றதும், சர்வசக்தியுள்ளதுமான ஆத்மாவாகிய நியாயாதிபதியின் ஸ்தானத்தில் நீங்கள் விளங்கும்போது—சோதியுள்ள உங்கள் ஆத்மா சுடர்விட்டு பிரகாசிக்கும்போது—சந்தர்ப்பங்களெல்லாம் தாமாகவேவந்து அமைந்து உங்கள் முன்னிலையில் எல்லாம் சீர்பட்டு, ஒவ்வொன்றும் உற்சாகமடையும். பாரததேசத்தின் வீரர்களிற் சிறந்த வீரனாகிய ஸ்ரீ ராமச்சந்திரனைப்பற்றி ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. ஞானவடிவாகிய சீதாபிராட்டியாரை அவர்தேடிச்சென்றபோது, பிரக்கிருதிதேவியே அவருக்குத் தொண்டுபுரிய வந்தாளாம். குரங்குகளும், அணில்களும், வாந்துகளும், கேவலம் கற்களும், வாயுவும், ஜலமும்கூட அவர்கட்சியில் வேலை

செய்யப் போட்டி போட்டனவாம். கேவலமான விரோதப் பான்மையையும், ஈனமானபற்றுகளையும்விட்டொழிந்து, உங்கள் ஆத்மாவின் மகிமையில் பிரகாசியுங்கள். அப்போது தேவர்களும், தேவதூதர்களும் எளிய அடிமைகளைப்போல் உங்களுக்கு பணிசெய்வார்கள். அப்படிச் செய்யாவிட்டால் அவர்கள் நாசமடைவார்கள் என்கிறேன்.

உங்கள் கடமைகளை நீங்கள் செய்து கொண்டே போனல், உங்கள் வேலையில் தவருமல் இருப்பீர்களானல் வெளி ஒத்தாசையையும், உதவியையும்பற்றி நீங்கள் கவலைப் படவேண்டியதில்லை. ஒத்தாசையும் உதவியும் உங்களுக்கு வர கடமைப்பற்றிருக்கின்றன. அவைகள் வந்தேதீரவேண்டும். நீங்கள் ஒரு உபந்நியாசம் புரிந்தாலும், அல்லது பிரயோஜனமுள்ளது ஏதாவது உங்களிடமிருந்தாலும், நம்மிடம் யார் வருவார்கள், யார் எழுதிக்கொள்வார்கள், இதை யார் பிரசுரம் செய்வார்கள், என்கிற கவலை உங்களுக்கு வேண்டாம். நியாயாதிபதியின் ஸ்தானத்தை வகித்துக்கொள்ளுங்கள். அம்மேன்மையான கண்ணியத்தில் ஸ்திரமாயிருங்கள், வெளிவிஷயங்களைப்பற்றியும், வெளி உதவிகளைப்பற்றியும் ஐயப்பட்டு உங்களுடைய சித்த ஸ்வாதீனத்தைக் கெடுத்துக் கொள்ளவேண்டாம்.

தேகத்தின் யாதானும் ஓர் பாகத்தில் சொறி உணர்ச்சி உண்டானல் கை அவ்விடத்தில் சொறியும் பொருட்டு தானுகவே ஓடுகின்றது. சொறி உணர்ச்சியுண்டான இடத்திலுள்ள சத்தும், கையிலுள்ள சத்தும் ஒன்று தானே. அதே மாதிரி, உங்களில் இருக்கும் சத்தும், உங்கள் சந்தர்ப்பங்களிலுள்ள சத்தும் ஒன்றே என்பதை நீங்கள் ஞாபகத்தில் வையுங்கள். உங்கள் மனதும் பரப்பிரம்மமும் ஒன்று பட்டிருக்கும்போதும், இப்பூவுலகமே உங்கள் தேகமெனநீங்கள் கருதும்போதும், உணர்ச்சியுண்டான இடத்திற்கு கையைப் படியோடுகிறதோ, அப்படி வெளி ஒத்தாசைகளும், உதவிக

ளும் உங்களுக்கு இயற்கையாகவே வலிய பறந்துவரும். நம் நிழலைப் பிடிக்கும் பொருட்டு அதன் பின்னாலே ஓடினால் அதை ஒரு போதும் நாம் பிடிக்கப்போகிறதில்லை. அது எப்போதும் நம்மை ஓட்டத்தில் வென்றுகொண்டேதானிருக்கும். ஆனால் நாம் சூரியன் திக்கைநோக்கி ஓடுவோமானால், அந்நிழல் நம்மை நாயைப்போல் பின்தொடருமே. அதே மாதிரி, நீங்கள் வெளிவிஷயங்களை நோக்கி அவைகளைப் பிடிக்கவேண்டுமென்கிறபோது, அவைகள் தந்திரமாய் உங்கள் கைப்பிடிப்பிலிருந்து தப்பித்துக்கொள்ளும். உங்களை ஓட்டத்தில் வென்றுவிடும்; ஆனால் அவைகளை விட்டுத்திரும்பி, ஜோதியாகிய உங்கள் அந்தராத்மாவை நோக்கி நீங்கள் செல்லும்போது, சாதகமான சந்தர்ப்பங்கள் உங்களை நாடி வரும். இதுதான் உண்மை.

‘கடமை’ என்னும் வார்த்தையைக் கேட்டதும் ஜனங்களில் அநேகர் முகம் மங்கலடைந்து, மூலையில் போய் பதுங்கிக்கொள்ளுகிறார்கள். கடமை ஓர் ஊமாண்டியைப்போல் அவர்களை ஊசாடுகிறது. இளைப்பாற அது அவர்களைத் தட்டிக்கொண்டே போகிறது. அது விடுவதில்லை. அவர்களைப்பற்றிக்கொண்டே யிருக்கிறது. கடமைக்கு பயந்த இவ்வடிமைகளாகிய எந்திரங்கள், தாங்கள் செல்லும் வேகத்தினால் தங்களுக்குள்ள சக்தியையே குறைத்துக்கொள்ளுகிறார்கள். கடமை உணர்ச்சி உங்கள் மன நிறையையும், ஆண்மையையும் கெடுக்க விடாதேயுங்கள். எல்லாக் கடமைகளும் உங்களாலேயே உங்களுக்கு நேர்ந்திருக்கிறதென்பதை ஞாபகத்தில் வையுங்கள்.

உங்களுக்குத் தலைவர் நீங்களே. நீங்கள் இருக்கும் ஸ்தானத்தை தெரிந்தெடுத்துக் கொண்டவர்களும், எஜமானர்களை உண்டாக்கிக் கொண்டவர்களும் நீங்களே. ஒருவருடைய பணம் உங்களுக்கு வேண்டுமானால், அதற்குத் தக்க

கிறது. எல்லாரும் சமமே தங்கள் தர்க்கமும் எதிர்தர்க்கமும் சமமானவை. உங்கள் இஷ்டப்படிதான் நீங்கள் ஒவ்வொன்றையும், செய்கிறீர்கள். வேறொருவரின் இஷ்டப்படியன்று. சந்தர்ப்பங்களை உண்டாக்கிக்கொண்டவர்கள் நீங்கள்தான். இச்சிறு பூலோக சம்பந்தங்களெல்லாம் உங்கள் செய்கைகளே. உங்கள் எதிர்காலமும் உங்கள் செய்கையைப் பொருத்தேயிருக்கின்றது. உங்கள் விதிகருக்கர்த்தா நீங்கள்தான். இவ்வுண்மையைத் தெரிந்துகொண்டு மகிழ்ச்சியடையுங்கள். சித்தஸ்வாதீனர்களாயிருங்கள்.

தள்ளாடுகிற கூலியைப்போலல்லாமல், கண்ணியமான ஓர் அரசனைப்போல்—பிரியத்துக்காகவும், தேகாப்பியாசத்திற்காகவும், சந்துஷ்டியை கொடுக்கும் விளையாட்டைப்போலவும், வேலைசெய்வீர்களாக. பக்தியுடன் ஒரு வேலையை நீங்கள் நெருங்கக்கூடாது. ஸ்வாதீனர்களாயிருங்கள். அரசர்களும், பிரஜாபதிகளும் உங்கள் வேலைக்காரர்களென்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். நட்சத்திரங்களைப்போல வேலைசெய்யவேண்டும்.

உத்தரவாதமற்றவர்களாயிருங்கள். ஒரு சம்மானத்தையும் கருதவேண்டாம் (எதிர்பார்க்கவேண்டாம்) எல்லா அதிகாரமும் உங்களுக்குக் கீழ்ப்பட்டேயிருக்கவேண்டும். கடமை எனும் உணர்ச்சியாவது, வெளி அதிகாரமாவது மேகத்தைப்போல் உங்களுக்கு நிழலிடவேண்டிய அவசியமில்லை. வெளி அதிகாரத்தினால் ஏற்பட்ட ஒழுங்குகள் க்ஷேத்திர கணிதத்துக்குரியதாயிருக்கலாம். ஆனால் நீங்களே ஏற்படுத்திக்கொள்ளும் ஒழுங்கோ அங்கத்திற்கடுத்ததாயிருக்கும்.

அநுகூலத்திற்கு ஐந்தாம் ஆதாரம்.—தைரியம்

அநுகூலத்திற்கு ஐந்தாம் ஆதாரமாகிய தைரியத்தைப் பற்றி இனிப்பேசுவோம். தைரியமாவதென்ன? அநுமாயையினிடத்தில் பக்தியற்றிருப்பதே! மெய்யான ஆத்மாவினி

உடையவரா யிருப்பதே. நம் பயத்திற்கு வாசஸ்தலமாகிய தேகம், என்று நாம் கருதும் போதுதான் நமக்கு பயம் உண்டாகிறது. தேகம் புழுக்களாலும் வியாகூலத்தினாலும் அரிக்கப்பட்டு போகத்தக்கது; அது எல்லாவித வியாதிகளாலும் பீடிக்கப்பட்டு சேதப்பட்டுப் போகக்கூடியது. இச்சிறிய தேகத்தைப்பற்றிய எண்ணத்தை நாம் விட்டு விலகியவுடனே, நாம் பயமற்றவராகி விடுகிறோம். கடவுளைப்போல் வாசம் பண்ணுங்கள், வேதாந்திகளாயிருங்கள், அப்போது உங்களுக்குத் தீங்கு செய்ய யாரால் முடியும்? உங்களுக்கு நஷ்டத்தை விளைவிக்க யாரால் கூடும்? வேதாந்தமும் தைரியமும் ஒன்றினின்றொன்று பிரிக்க முடியாதவைகள். தைரியம் அநுகூலமடைவற்கு இன்றியமையாதது. அனுபவத்தில் கண்டறிந்த ஓர் விஷயத்தைக் கொண்டு இதை நிதர்சிக்கலாம். ஹிமாசலத்திலுள்ள காடுகளில் ஐந்து கரடிகள் ஏககாலத்தில் என்முன் வந்தன. ஆனால் அவைகள் யாதொரு இடைஞ்சலும் எனக்குச் செய்யவில்லையே. அஃதெனப்படி? என்னிடத்தில் பயமின்மையாலேயே நான் தேகமல்லேன், நான் மனதுமல்லேன், சர்வசக்தியுள்ள பிரம்மம் நானே, நான் கடவுள், தீ என்னை எரிக்கமுடியாது. ஆயுதம் என்னை காயப்படுத்த முடியாது" என்னும் எண்ணம் நிறைந்தவனாயிருந்தேன். அவைகளை உற்றுநோக்கினேன். அவைகள் ஓட்டம் பிடித்துவிட்டன. நான் உற்றுநோக்க ஒருகாட்டு ஓநாய் ஓட்டம் பிடித்தது. மற்றொரு சமயம், ஒரு புலி அதேமாதிரி ஓடிவிட்டது. ஒரு பூனை வந்தால் புறாக்கள் தம் கண்களை மூடிக்கொள்ளுகின்றன. தாம் பூனையைப் பார்க்காவிட்டால் பூனை தங்களைப் பார்க்கிறதில்லை என்று அவைகள் நினைத்துக்கொள்ளுகின்றன. ஆனால் பூனையோ அவைகளைப் பக்ஷித்து விடுகின்றது. நீங்களும் பயப்படுவீர்களானால் பூனை உங்களையும் பக்ஷித்து விடுமே. கிராமாந்தரப் பக்கங்களில் நாம் செல்லும்போது, நம்மிடம் கொஞ்சம் பயமி

ருப்பதாக மாத்திரம் காட்டிவிட்டால் கேவலம் நாய்களுங்கூட நம்மேல் பாய்ந்து தீங்கு செய்வதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களல்லவா?

நாம் பயப்பட்டால் நாய்கள் நம்மைப் பீறியுங்கூட விடுமே ஆனால் நாம் தைரியசாலிகளாயிருப்பின் சிங்கங்களையும் புலிகளையும் ஜெயித்து அவைகளைச் சாந்தப் படுத்தி விடலாம். நாம் ஒரு பாத்திரத்திலிருந்து மற்றொரு பாத்திரத்திற் ஜலங்கொட்டும் போது நம்கைகள் நடுங்குமானால் ஜலம் சிந்திப்போவது நிஜமன்றோ. தாமதமின்றியும் விசுவாசத்துடனும் தைரியத்துடனும் ஜலத்தை ஊற்றினால் ஒரு துளியுங்கூட சிந்தாது.

இத்தாமதமும் பயமுமே உங்களை, விசனகரமான நிலைமைக்குக் கொண்டுவந்து விடுகின்றன. ஒன்றும் உங்களைத்தடுமாறப் பண்ணக்கூடாது. ஒன்றையும் கண்டு நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம். சர்வமும் நீங்களே. தேகப்பற்றை உண்டுபண்ணுகிறதும் பயத்தை உண்டுபண்ணுகிறதுமான பந்தத்தைத்தூர விலக்கி விடுங்கள். பட்டாஸ் சப்தம் அல்லது கேவலம் ஒரு சிறு மூஞ்சுரின் சப்தம் அசையும் இலையின் சப்தம் அது மாத்திரமல்ல கேவலம் அசையும் நிழலின் சப்தம் கூட ஒரு பருத்தமனிதனைத் திடுக்கிடும்படி செய்வது பரிதாபமன்றோ. பயம் உண்டுபண்ணும்படியான இடுக்கணைப் பார்க்கிலும் நீசமான இடுக்கண் வேறொன்றும் கிடையாது. மரண பயத்திற்கு இடங்கொடுப்பதைப் பார்க்கிலும் நான் மரணமடைவதையே சிலாக்கியமெனக் கொள்வேன்.

ஒருவர் சொல்லுகிறார் "ஊறுகிற நிலவேம்பைப்பற்றி தன் மனதில் நினைக்காதவன் அதைப் பார்த்ததில்லை." உங்கள் மனதில் அன்பிருக்குமானால், நீங்கள் எங்கும் அன்பையே காண்பீர்கள்; விரோதம் பாராட்டுவீர்களானால் எங்கும் விரோதத்தையே காண்பீர்கள். கள்ளங்கண்டுபிடிப்போ

ருக்கும், வஞ்சகர்களுக்கும் பயப்படுவீர்களானால், அப்படிப் பட்டவர்களைக் காணத்தவறமாட்டீர்கள். சுயநலத்தையும், மோசத்தையும் எதிர்பார்ப்பீர்களானால் அவைகளைக் காண்பீர்கள். எல்லாப்பக்கங்களிலிருந்தும் சுயநலமும், மோசமுமே உங்கள் எதிர்முகமாய் நிற்கும். ஆகையினாலே, பயப்படாமல் இருங்கள். பரிசுத்தமும் தூய்மையுமே உங்களில் இருக்கட்டும். அழுக்கான விஷயங்களில் தலையிடுதல் வேண்டாம். ஜீவசித்தியும் ஆத்மசித்தியும் ஒன்றாகவே செல்லல் வேண்டும். ஒன்றினின்று மற்றதைப் பிரிப்பவர் ஏமாந்தவர்களேயாவீர்.

காவலில்லாத வீட்டில்தான் திருடர்கள் கன்னம் வைத்து விடுகின்றார்கள். வீட்டில் எந்நேரமும் விளக்கு எரிந்துகொண்டேயிருந்தால், திருடர்கள் அதனுள் நுழைய மாட்டார்கள். சத்தியமென்னும் விளக்கு உங்கள் மனதில் எப்போதும் எரிந்து கொண்டிருந்தால், பயமென்கிறபேய் உங்களையண்டாது. கடவுளில் நம்பிக்கை வையுங்கள். லௌகிக அறிவில் உங்கள் ஜீவனைப் பிணித்து அதனால் அதை இழிவு படுத்திக்கொள்ள வேண்டாம். கோழைத்தனமுள்ள விவேகம் உங்களை நாஸ்திகர்களாக்கி விடுகிறது. சந்தர்ப்பங்களாகிய மூடுபனி உங்களை மேகம்போல் கவிந்துக் கொள்ள என் இடம் கொடுக்கின்றீர்கள்? நீங்கள் சூரியன்களுக்குச் சூரியனன்றோ? பிரபஞ்சத்திற்குத் தலைவன் நீங்களன்றோ? உங்களால் அகற்றமுடியாத சந்தர்ப்பத்தடுமாற்றங்கள் என்ன உண்டு? பயமுறுத்தும் சந்தர்ப்பங்கள் உண்மையில் உண்டெனும் எண்ணம் உங்களினின்று வெகுதூரத்திலிருக்கட்டும். தைரியமாயிருங்கள், தைரியமாயிருங்கள் தைரியமாயிருங்கள்.

## அநுகூலத்திற்கு ஆறும் ஆதாரமாயிருப்பது.—
## சுயநம்பிக்கை.

ஆருவத் ஜயம் பெறுவதற்குற்ற இரகசியம் சுயநம்பிக்கை. யானை சிங்கத்தைக்காட்டிலும் பெரிய ஜந்துவென்பது உங்களுக்குத் தெரிந்தவிஷயம். யானையின் சரீரம் கேசரியின் சரீரத்தைக் காட்டிலும் எத்தனையோ பங்கு அதிக பலமுள்ளதாகக் காணப்படுகின்றது. அப்படியிருந்தும் ஒரு சிங்கம் கூட்டமான யானைகளை ஓட்டம்பிடிக்கச் செய்யக்கூடும். சிங்கத்தின் வல்லமையின் மர்மம் என்ன? ஒரே இரகசியம் என்னவெனில், சிங்கம் சாதனையாகவே ஒரு வேதாந்தி, யானைகள் துவைதிகள். யானைகளுக்கு தம் தேகத்தின்மேல் நம்பிக்கை, ஆனால் சிங்கமோ அப்படியன்று, சரீரத்தைக் காட்டிலும் மேலான வஸ்துவாகிய ஆத்மாவை நம்புகின்றது. சிங்கத்தின் சரீரம் வெகுசிறியதாகவிருப்பினும், தன்வல்லமை மகத்தானதென்று அது நம்புகிறது. யானைகள் 40-அல்லது 50 ஆக கூட்டம் கூடி வசிக்கும். சிலசமயங்களில் 100-அல்லது 200-ஆகக்கூட வசிக்கும். அவைகள் இளைப்பாறப் போகும்போது, பலமுள்ள ஒருயானையைக் காவல் காப்பதற்காக நியமித்துக்கொள்ளும் சத்துருக்கள் வந்து அவைகளைத் தாக்கி விழுங்கிவிடுமென்னும் பயம் யானைகளுக்குண்டு. தன்னிடம் நம்பிக்கை மாத்திரம் இருக்கும் பட்சத்தில் ஒரு யானை ஆயிரக்கணக்கான சிங்கங்களை நாசமாக்கிவிடக்கூடுமென்னும் சங்கதி அவைகளுக்குத் தெரியாது. ஆனால் இப்பரிதாபப்படத்தக்க யானைகளிடத்தில் சுயநம்பிக்கையில்லை, அதனால் தைரியமும் இல்லாமல் போய்விடுகிறது.

முக்திக்கு அஸ்திவாரமான ஆதாரம் சுயநம்பிக்கைதான். உங்களை, அற்பமான, பதுங்குகிற, நிர்ப்பந்தமான பாவிகளென்று நீங்கள் சொல்லிக்கொள்ளக் கூடாதென்று வேதாந்தம் போதிக்கின்றது. உங்களுக்கு இயல்பாகவுள்ள சக்தியில்

நம்பிக்கை வைக்கும்படி வேதாந்தம் சொல்லுகிறது. நீங்கள் எல்லையற்றவர்கள். சர்வசக்தியுள்ள கடவுள் நீங்களே, எங்கும் நிறைந்த பரப்பிரம்மம் நீங்களே. இதை நம்புங்கள். ஆ! என்ன ஞானஅருள் தரத்தக்க உண்மை இது! உங்களுக்கு வெளியேயுள்ளவைகளை நம்பினீர்களாயின், நீங்கள் தோல்வியடைவது நிச்சயம். இதுதான் உண்மை.

ஒருவழக்கில் அகப்பட்டுக்கொண்ட இரண்டு சகோதரர்கள் ஒரு நியாயாதிபதியின்முன் ஆஜரானார்கள். அவர்களில் ஒருவன் கோடீஸ்வரன், மற்றவன் பரமஏழை. ஒருவன் அவ்வளவு தனவானாகவும் மற்றவன் அவ்வளவு ஏழையாகவும் இருப்பதற்கு காரணம் என்னவென்று நியாயாதிபதி அக்கோடீஸ்வரனை வினவினார்.

அதற்கவன் "ஐந்து வருடங்களுக்குமுன் நாங்கள் இருவரும் சமமான பிதுரார்ஜித சொத்தையடைந்தோம். அவன் பங்குக்கு 50000 டாலர்களும் (அமெரிக்க நாட்டு நாணயம்.) என் பங்குக்கு 50000 டாலர்களும் கிடைத்தன. இவன் தன்னைச் செல்வவானாக நினைத்துச் சோம்பேறியானான். (சில செல்வவான்கள், வேலை செய்வது தங்கள் அந்தஸ்துக்கு தகாததென்று கருதுகிற சங்கதி உங்களுக்குத் தெரிந்ததுதானே). எவ்வேலை செய்யவேண்டியிருப்பினும், அதை தன் வேலையாட்களைச் செய்யும்படி விட்டுவிடுவான். அவனுக்கு ஏதாவது கடிதம் வந்தால், அதைத் தன் வேலைக்காரரிடம் கொடுத்து, 'போய் அவ்வேலையைச் செய்' என்பான், எது செய்யவேண்டியதாயிருந்தாலும், அதை தன் வேலைக்காரர்களையே செய்யும்படி சொல்லுவான். அவன் காலத்தைக் குடிப்பதிலும், சாப்பிடுவதிலும், கூத்தாடுவதிலுமே கழித்தான்.

அவன் எந்நேரமும் தன் ஆட்களை நோக்கி "போங்கள். போங்கள், அவ்வேலையைச செய்யுங்கள், என்பான்" என்று சொல்லிவிட்டு, தன்னைப்பற்றி பின்வருமாறு சொன்னான்.

"எனக்கு 50,000 டாலர்கள் கிடைத்தபிறகு, என் வேலையைச்செய்யும்படி நான் ஒருவனுக்கும் கட்டளையிடவில்லை. யாதாவது செய்ய வேண்டியிருப்பின் அதைச் செய்ய நானே ஓடுவேன். என்வேலையாட்களை "வாருங்கள், வாருங்கள், என்னைப் பின்பற்றுங்கள்" என்பேன். என்வாயிலிருந்து எப்போதும் 'வா' 'வா' என்னும் வார்த்தைகள் தான் வரும், ஆனால் என் சகோதரன் வாயினின்றோ 'போ' 'போ' என்னும் வார்த்தைகள் தான் வந்தன. அவனிடமிருந்த ஒவ்வொன்றும் அவன் கட்டளைக்கு பயப்பட்டன. அவன் வேலையாட்களும், நண்பர்களும், செல்வமும் அவனை விட்டு ஓடியேபோய்விட்டன. ஆனால் என்சித்தாந்தமோவெனில் 'வா' என்பதே ஆகையால் சிநேகிதர்களும் வந்தார்கள், செல்வம் விர்த்தியடைந்தது. ஒவ்வொன்றும் பெருகிற்று!

நாம் பிறரை நம்பும்போது, "போ" போ, என்கிறோம் எல்லாம் போய்விடுகின்றது, ஆனால் நம் ஆத்மாவில் நம்பிக்கை வைக்கும்போது எல்லாம நம்மிடம் ஓடிவருகின்றது. உங்களை கேவலம் புழுக்களென்று நினைப்பீர்களாயின், நீங்கள் அவைகள் ஆகிவிடுகிறீர்கள். ஆனால் உங்களை மேன்மைப் படுத்திக்கொண்டு, சுயநம்பிக்கையுடையவராயிருப்பீர்களாயின், நீங்கள் பெருமை அடைகிறீர்கள். நீங்கள் எப்படி நினைக்கிறீர்களோ அப்படியே மாறிவிடுகிறீர்கள்.

இந்தியாவில் பரிசோதகர் (இன்ஸ்பெக்டர்) ஒருவர் ஒருநாள் ஓர் பாடசாலைக்கு விஜயம் செய்தார். அப்போது வாத்தியார்களில் ஒருவர். ஓர் மாணாக்கனைப் பரிசோதகருக்குச் சுட்டிக்காட்டி, 'இவன் மகா கெட்டிக்காரன், மில்டன்ஸ் பேரடைஸ் லாஸ்ட் (Milton's 'Paradise Lost' செய்யுள்) இவன் மனப்பாடம் செய்திருக்கிறான். அதில் எப்பாகத்தை வேண்டுமென்றாலும், இவன் பாராமல் ஒப்புவிப்பான்' என்றார். அப்பையனைக் கொண்டுபோய் பரிசோதகர் முன் நிறுத்தினார்கள். ஆனால் அவன் வேதாந்தியல்லன்; சங்கோசமும், கோழை

த்தனமுமுள்ளவனுமிருந்தான். 'உனக்கு அது மனப்பாடமா' என்று பரிசோதகர் அவனைக் கேட்க, அதற்கவன் 'இல்லை ஐயா; நான் அற்பம், எனக்கு ஒன்றுமே தெரியாது' என்றான். கூச்சமும் கோழைத்தனமும் இவனிடம் இருப்பதால் இவன் இப்படிச் சொல்லுகிறான் என்று பரிசோதகர் நினைத்து, மறுபடியும் அவனை "அதேமாதிரி கேட்டார், இப்போதும் அவன் "இல்லை ஐயா, இல்லை ஐயா, எனக்கு அது தெரியாது" என்றே சொல்லிவிட்டான். அவ்வாத்தியாருக்கு அதிக அவமானம் உண்டாகிவிட்டது. அச்செய்யுள் முழுதும் மனப்பாடமாகத் தெரியாத வேறொருபையன் அங்கிருந்தான். அவன் எழுந்து "அது எனக்குத் தெரியும் உங்களுக்குப் பிரியமான எப்பாகத்தை வேண்டுமானாலும், நான் ஒப்புவிப்பேன்" என்று சொன்னான். பரிசோதகர் அவனைச் சில கேள்விகள் கேட்டார். அக்கேள்விகளுக்ெல்லாம் உடனே அவன் விடையளித்துவிட்டான். இரண்டாம் பையனே அதை ஒப்புவித்து விட்டு, வெகுமதியையும் பெற்றான். நீங்களே உங்களை மதிப்பதைக்காட்டிலும் அதிகமாக வேறொருவர் உங்களை ஒருபோதும் மதிக்கமாட்டார்கள்.

தயவு செய்து, 'உங்களை' கெஞ்சுகிறதும், கேவலமானதும், பதுங்குகிறதுமான ஜந்துக்களாக்கிக் கொள்ளவேண்டாம். நீங்கள் நினைப்பதுபோல் ஆய்விடுகின்றீர்கள். பிரம்மம் நீங்கள் என்று நினையுங்கள், பிரம்மம் நீங்களாய் விடுகிறீர்கள். நீங்கள் பந்தமற்றவர்களென்று நினையுங்கள், இத்தக்ஷணமே நீங்கள் பந்தமற்றவர்களாகி விடுகிறீர்கள்.

ஒருநாள் ஓர் வேதாந்தியின் கிரகத்திற்கு ஒருவன் வந்தான். வீட்டெஜமானர் வெளியே போயிருக்கக்கண்டு, அவன் உயர்ந்த ஓர் ஆசனத்தில் உட்கார்ந்தான். எஜமானர் வீட்டிற்குத் திரும்பியதும், உத்தரவின்றி வீட்டில் நுழைந்தவன் பின்வருமாறு அவ்வெஜமானரை வினவினான். "ஓ,

வதார்த்தி! கடவுள் என்றால் என்ன, மனிதன் என்றால் என்ன, இவ்விஷயத்தைப் பற்றி எனக்குத் தெரிவிப்பீராக" அப்பெரியவர் நேரேவிடை பகர்வதை விடுத்து, அதிக சப்தத்துடன் பேச ஆரம்பித்துக் கோபமடைந்தவராய்த் தம் வேலையாட்களைக் கூப்பிட்டு, அவனை வெளியே துரத்தும்படி கட்டளையிட்டார். எதிர்பாராதபடி இப்படி அவர் பேசியதைக்கண்டு அவன் பயந்து நடுநடுங்கி அவ்வாசனத்தை விட்டு விலகினான், அம்முனிவர் அவ்வாசனத்தில் எழுந்தருளி, அமைதியாயும், சாந்தமாயும் அவனுக்கு பின் வருமாறு சொல்லலுற்றார்.

"இங்கிருப்பது (தம்மைச் சுட்டிக் காட்டி) பிரம்மம்; அங்கிருப்பது (அவனைச் சுட்டிக் காட்டி) மனிதன். நீ பயப்படாமலும், அவ்வாசனத்தை விட்டு நகராமலும், உன் சித்த ஸ்வாதீனத்தை யிழக்காமலும், இருந்திருப்பாயானால் நீ கடவுளே. ஆனால் அதற்கு மாறாக நீ பயந்து நடு நடுங்கி, உன் பிரம்மத்துவத்தில் நம்பிக்கை யிழந்ததினால் நீ கேவலம் ஓர் புழுவே" ஆதலின் கடவுள் நீங்களே என்று நினைப்பீர்களானால், உங்கள் தெய்வத்துவத்தில் நம்பிக்கை வைப்பீர்களானால், உங்களுக்குத் தீங்கு செய்ய ஒருவராலும் முடியாது, ஒருவரும் உங்களுக்குக் கெடுதி செய்ய மாட்டார்கள்.

உங்களுக்குப்புறம்பான சக்திகளில் நீங்கள் நம்புகிறவரையில் தோல்விதான் அடைவீர்கள். உங்களில் இராகின்ற கடவுளிடம் நம்பிக்கைவைத்து, சரீரத்தைத் தொழில்புரியச் செய்வீராயின், நீங்கள் காரியசித்தியடைவது நிச்சயம். மலை மகம்மதுவினிடம் வராவிடில், மகம்மதுமலையினிடம் போகவேண்டியதுதானே. ஒருவர் இருந்தார். அவருக்கு பசியாகிவிட்டது. அப்பசியைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு, ஓர் இடத்தில்உட்கார்ந்து, தம் கண்களை மூடிக்கொண்டு, மனோரதியமான சாப்பாடு சாப்பிட ஆரம்பித்தார். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு, காரத்தைத்தணிக்கும் பொருட்டு, தம்

வாயைப் பிளந்துக் கொண்டிருக்கக் காணப்பட்டார். என்ன விசேஷமென்று ஒருவர்கேட்க, அதற்கவர் தம் ஆகாரத்தில் அதிக காரமிருந்ததாகச்சொன்னார். (Chilly) பெயர் *குளிர்ச்சியானதாகத்தானிருக்கிறது, ஆனால் வஸ்துக்கள், வெகு காரம். அப்போது அங்கு நின்றுக்கொண்டிருந்த ஒருவர் "ஐயோ, பாவி, நீ மனோரதியமான ஆகாரத்தை புசிக்க வேண்டியிருப்பின், காரமான வஸ்துவை விடுத்து வெகு இனிப்பான ஒன்றையேன் தெரிந்தெடுத்துக் கொண்டிருக்கக் கூடாது, அது உன்னுடைய சிருஷ்டிப்பாயிருந்தும், உன் செய்கையாயிருந்தும், உன்மனோரதியமாயிருந்தும், நீயேன், நல்லதொன்றைத் தெரிந்து எடுத்திருக்கக் கூடாது?" என்றார்.

வேதாந்தத்தின்படி பூலோகமே, உங்கள் சிருஷ்டிப்பாயிருந்தும், உங்கள் மனோபாவமாயிருந்தும், உங்களை, தாழ்ந்த, பரிதாபகரமான பாவிகளென்று நீங்களே ஏன் நினைக்கிறீர்கள்? உங்களைப் பயமற்ற, சுயநம்பிக்கை வாய்ந்த கடவுளின் அவதாரமென்று, நீங்கள் ஏன் கருதக்கூடாது?

உண்மையில் நம்பிக்கையுடையவராயிருக்கள். உங்களைச் சுற்றிலுமுள்ள விஷயங்களைப்பற்றி தெளிந்த அறிவுள்ளவராயிருங்கள். சந்தர்ப்பங்களை யுள்ளபடியே உணர்ந்து ஆத்மாவைக்கண்டறிந்து, உலகம் பொய் என்பதைத் தெரிந்துக்கொள்ளுங்கள். வானசாஸ்திரத்தில் நட்சத்திரங்களின் தூரத்தைக் கணிக்கும்போது. இவ்வுலகத்தை யாதோ ஒரு குறிப்பாகமாத்திரம் பாவிக்கிறார்களே யொழிய, நட்சத்திரங்களுக்கும் பூமிக்கும் சம்பந்தமிருப்பதாக அப்போது அவர்கள் (சாஸ்திரிகள்) பாவிக்கிறார்களில்லை. அப்படியிருக்க, சர்வசக்தியுள்ளதும், எல்லையற்றதுமாகிய ஆத்மாவோடு இம்மண்ணுலகத்தை எப்படி ஒப்பிடக்கூடும். அதைத் தெரிந்

*காரம் என்பதற்கு ஆங்கிலத்தில் சில்லி Chilly என்பார்கள். Chill சில் என்றால் குளிர்ச்சியான என்று அர்த்தமுமுண்டு.

க் கொள்ளுங்கள், அதை உணருங்கள். பிரகாசங்களுக்கு மூலகாரணம் நீங்களே, எல்லா மகிமையும் உங்களுடையதே, இப்பூலோகமும், பேரும் கீர்த்தியும். பூலோக சம்பந்தங்களும், கீர்த்தியும், அபகீர்த்தியும். பூலோக பெருமையும், பூலோக அவமானமும், உங்கள் நண்பர்களின் முகஸ்துதியும். விரோதிகளின் கண்டிப்பும், அர்த்தமில்லாமல் போகும்படி, உங்கள் ஆத்மசக்தியை அறியுங்கள், அதை உணருங்கள். இதுதான் அநுகூலமர்மம்.

நயகாராநதியின் கதியான நீரோட்டம் இருவரை அடித்துக்கொண்டு வந்தது. அவர்களில் ஒருவன் ஓர் மரக்கட்டையைக்கண்டு, தன்னைக்காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு, அதைப் பிடித்துக்கொண்டான். மற்றொருவன் ஒரு சிறுகயிற்றைக் கண்டான். இதை, தண்ணீரில் விழுந்தவர் பிடித்து தம்மைக்காப்பாற்றிக் கொள்ளும்படி, ஜனங்கள் போட்டது. நல்லவேளையாய் இதை மற்றொருவன் பிடித்துக்கொண்டான். இக்கயிறு மரக்கட்டையைப் போல் அவ்வளவு கனமுள்ளதன்று. கயிறு உறுதியற்றதாயிருந்தாலும், அதைப்பிடித்தவன் உயிர்தப்பினன். ஆனல் மரக்கட்டையைப் பிடித்தவனே சப்திக்கும் ஜலவீழ்ச்சியின் அலைகள் நிறைந்த ஜலப்பிரேத கல்லறையில் கொண்டுபோய் அமிழ்த்தப்பட்டான்.

அதே மாதிரி, ஓ, பூலோகத்தோரே! வெளிபெயர்களிலும், கீர்த்தியிலும், செல்வத்திலும், பூஸ்திதியிலும் நம்புகிறீர்களே. இவைகளெல்லாம் உங்களுக்கு அம்மரக்கட்டையைப்போல் காணப்படினும், உங்களை ஈடேற்றத்தக்க ஆதாரம் இவைகளன்று. ஈடேற்றத்தக்க ஆதாரம் அச் சூக்ஷ்மமான கயிற்றைப் போன்றது. அது சடப்பொருளன்று. நீங்கள் அதை உணர முடியாது, தொட முடியாது, அது நுட்பமான மூலசூத்திரம், நுட்பமான உண்மை, வெகு மேலானது. ஆனல் அக்கயிறு தான் உங்களை ஈடேற்றத்

தக்கது. இப்பூலோக விஷயங்களில் நம்புகிறீர்களோ. அவைகள் உங்களைக் கெடுத்து. நம்பிக்கையின்மை, துக்கம், கவலை எனும் படுகுழியில் உங்களைத் தள்ளிவிடுகின்றன.

ஏமாறுதேயுங்கள், ஏமாறுதேயுங்கள். உண்மையைக் கைப்பிடியுங்கள். வெளி விஷயங்களைக் காட்டிலும், உண்மையினிடம் அதிக நம்பிக்கை வையுங்கள். இயற்கை நியமம் என்னவெனில், வெளிவிஷயங்களிலும், செல்வத்திலும் ஒருவன் நம்பிக்கை வைத்தானுனல் அவன் ஈடேறுவது அசாத்தியம். இதுதான் உண்மை. கடவுளை நம்புகேள். நீங்கள் க்ஷேமம் அடைவீர்கள், இந்திரியத்துக்குட்பட்ட பேதைகளாயிருக்க வேண்டாம்.

பிறருடைய வசிகாத்திற்கும் பிரயோசுதத்திற்கும் நீங்கள் உட்படக் கூடாது. உங்கள் லெளகீக பந்தங்களும், சம்மந்தங்களும் உங்களை துன்பங்களுக்கும், கவலைகளுக்கும் உட்படும்படி வசீகரிக்கின்றன. அவைகளுக்கு மேலே கிளம்புங்கள். உண்மையையே நம்புங்கள், நீங்களும் பிரம்மமும் ஏகமென்பதை அறிந்து கொள்ளுங்கள்; அப்போது தான் நீங்கள் காப்பாற்றப்படுவீர்கள், அது மாத்திரமன்று மோக்ஷமே நீங்களாகி விடுகிறீர்கள்.

மெய்யான ஆத்மாவைக் காட்டிலும் இப்பூவுலகம் பிரதானமானதெனக் கொள்ளும் எண்ணம் உங்களினின்று வெகு தூரம் நிற்கட்டும். உரோசமுள்ளதும், பரிதாபகாமானதும், கு பதுமான அகங்காரமுடையவராயிருக்க வேண்டாம். களையொன்றும் அழுக்காறு உடையோராக்க விடவேண்டாம். வைத்தியர்கள் வியாதியஸ்தருக்கு தங்களுக்கு அவ்வியாதி ஒட்டாமலே—வைத்தியம் பார்ப்பது போல, நீங்கள் உங்கள் வேலையை செய்வீர்களாக. கபடமற்ற சாட்சியைப்போல், பந்தமற்றவராய் தொழில்புரியுங்கள். பந்தமற்றிருங்கள்.

## ஏழாம் ஆதாரம்—தூய்மை.

கடைசியானதும்.—ஆனால் ஒருவிதத்திலும்விசேஷத்தில் குறையாததும், அநுகூலத்திற்கு உத்தரவாதமுள்ளதும் தூய்மைதான்.

"எண்ணம் அதிர்ஷ்டத்திற்கு வேறு பெயர்" என்பது உண்மைதான்; மனிதன் எப்படி நினைக்கிறானோ, அப்படியே ஆய்விடுகிறான். ஆனால் நீங்கள் அழுக்கடைந்த எண்ணங்களை நினைத்தாலும், கேவலமான துன்மார்க்க நடைத்தைகளுக்கு இடங்கொடிப்பினும், இச்சுயநல ஆசைகளைத் தீர்க்கும்போது மனதை புண்படுத்துகிற துக்கமும், உங்களை வதைக்கிற இடுக்கணும், குழப்புகிற விசனமும், கட்டாயம் உங்களை நாடும் துக்கம் உங்கள் ஜீவனை சூறையாடிவிடும். மூடன், தான் சிற்றின்ப சுகங்களை சுகமாய் அனுபவிப்பதாக நினைக்கிறான். ஆனால் தன்ஜீவன் கெட்ட எண்ணங்களிலோ, அல்லது துர்ச் செய்கைகளிலோ, நாசமாக்கப்பட்டுப் போகிறது அவனுக்குத் தெரிகிறதில்லையே. நீங்கள் அதை, சுயநலத்திற்காக பழுதாக்கும்போது, கர்மவிதி உங்களுக்குப் பிரதிகரிப்பதுடன், உங்களை வீணாக்குகிறது. உங்கள் சித்தத்தின்படி கடவுள் செய்ய வேண்டாம்.

தேக இச்சைகளின்படி செய்வதை விடுத்து, கடவுளின் சித்தத்தின்படியே எல்லாம் நடக்கட்டும். லௌகிக விஷயங்களில் கடவுள் சித்தமே உங்கள் சித்தமாக விருக்கவேண்டும். யாருடைய சித்தத்தின்படி தற்கால சந்தர்ப்பங்களெல்லாம் அமைந்திருக்கின்றனவோ, அச்சர்வசக்தி நீங்களேயென்பதை உணருங்கள். தரித்திரத்தை, உங்கள் கர்மம் தானென்று அனுபவியுங்கள். ஆனால் தேகத்திற்சுட்டபட்டு வழிதப்பி, சிற்றின்பமெனும் சதுப்பு நிலத்தில் சிக்கிக்கொண்டதாக உங்களுக்குத் தெரிந்தால், உங்கள் அபாரமான மனோசக்தியை ஊக்கத்துடன் உபயோகித்து, பிரம்ம சைதன்யத்தைப் பெற்று, அதைப் பத்திரப்படுத்திக்கொள்ளத் தருணம்

இருக்கிறதென்று உறுதியாகச் சொல்லலாம். இத்தேசத்தில் காமாதுரத்திற்கு பரிசுத்த நாமமாகிய அன்பு என்னும் பளிங்கு வர்ணம் பூசியிருக்கின்றார்கள். என்ன பரிகாசம்! ஜனங்கள் மொத்தஸ்ரூபமாய் வாழ்கிறார்களில்லை. விபரீதமானதும், மட்டுக்கதிகமானதுமான காமம் அவர்களுடைய நாட்களை துண்டுதுண்டாகத்துண்டித்து விடுகிறது. பூரண யௌவன புருஷன் பேசுவது வெகு அபூர்வம், அவனின் சத்துக் குறைந்த தகுபின்னம்—இன்னும் சரியாகச் சொல்லப்புகின்— தகுபின்னமே பகிரங்கமாகக் காணப்படுகின்றது. அவனின் ஒருபாகம் தன்காதலியினிடமும், மற்றொரு பாகம் இன்னொரு வஸ்துவினிடமுமே இருக்கின்றன. உங்கள் தொழிலை நேசியுங்கள்; ஹிருதயமும் கைகளும் ஒன்றாக வேலைசெய்யவேண்டும். கையும் காலும் வேகமாகத் தொழில் புரியட்டும், ஆனால் உங்கள் புத்தி சாந்தமாயும் தெளிவுடையதாயுமிருக்கவேண்டும் உங்கள் எண்ணங்களையெல்லாம் மெய்யான ஆத்மாவின் மத்தியில் வையுங்கள். சந்தர்ப்பங்களைப்பற்றிய விசாரம் உங்களுக்கேன்? மானிட கோடிக்கு நன்மை புரியும் எண்ணம் உங்களை கிலேசப்படுத்த வேண்டாம். உங்களை பிட்சை கேட்கும்படி. உலகம் அவ்வளவு ஏழையாயிருப்பானேன். உங்கள் ஈடேற்றத்திற்காக, சரீரம் பாடுபட்டுக்கொண்டே போகட்டுமே. மூட ஜனங்கள் வெளிச்சத்திற்காக கெஞ்சி பிரார்த்திக்கிறார்கள். அதைத் தான் நீங்கள் என் இச்சிக்கவேண்டும். வெளிச்சத்திற்காக மன்றாடுகிறதானது உங்களை இருட்டிலே தான் வைக்கிறது. ஒரு நிமிஷம், உங்கள் ஆசைகளெல்லாம் விட்டு. ஓம் எனும் மந்திரத்தை உச்சரியுங்கள்; பற்றும் வேண்டாம், துவேஷமும் வேண்டாம், பரிபூரண சமநிறைவேண்டும், அப்போது தான் உங்கள் முழுசரீரமும் வெளிச்ச பருஷாரூபமாகிவிடுகிறது, வேலையைப்பற்றிய லௌகிக நோக்கங்களை அகற்றுங்கள். ஆசைகள் எனும் பூதங்களை யோட்டித் துரத்துங்

கள். உங்கள் வேலையை யெல்லாம் புனிதமாக்குங்கள். பற்று
என்னும் வியாதியிலிருந்து விலக்கிக்கொள்ளுங்கள். ஒன்றி
னிடம் பற்றுவைப்பதானது, உங்களை சர்வத்தினின்று
பிரித்துவிடும்.

தன்னயம் கருதியநோக்கங்கள்தான் உங்கள் உழைப்பை
யும், வாழ்நாளையும் லௌகிகப்படுத்தி விடுகின்றன. உங்களை
யறியாமலே அதற்குரித்தாயிருக்கும் துறவை அனுபவித்த
றிய உழையுங்கள். உழைப்பு உங்களை பிரம்மத்தோடு ஐக்
கியப் படுத்துகிறது. ஆகையினாலே லௌகிக சுய நலங்களி
னின்று நீங்கியிருங்கள். உழைப்புக்கு பயன் ஒன்று
மிருப்பானேன்? வேலையைக்காட்டிலும் முடிந்து போன
காரியம் அதிக ஆனந்தத்தைத் தருகிறதென்று மூடர்கள்
நினைக்கின்றார்கள். ஆனந்தம் வேலையெனும் உடை தரித்
திருக்கின்றதே. வெற்றி எப்போதும் உங்களிடமே யிருக்
கிறது. இப்படித்தான் இவ்வகண்ட உலகம் உங்கள் திருக்
கோவிலாகி விடுகிறது, உங்கள் வாழ்நாட்க ளெல்லாம்
தொடர்ச்சியான ஓர் சங்கீதமாகி விடுகிறது. புகழைப் பற்றிய
கவலை உங்களுக்கேன்? சம்பளத்தைப்பற்றி (பயனைப்பற்றி)
நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்களுக்கு ஓர் கௌரவ
மான அந்தஸ்து கிடைக்காவிடில், நீங்கள் வீதி பெருக்குவதி
னின்று இம்மின்னுகிற மாயை உங்களைத் தடுக்கக்கூடாது.
அடுத்தாற் போலுள்ள வேலையைச் செய்ய நீங்கள் தாமதிக்க
வேண்டாம். நாகரீகத்தால் அங்கீகரிக்கப்படாத தொழில்
புரியாதது ஆத்ம சம்மானமன்று. ஆனால் உங்களிலிருக்கும்
மெய்யான ஆத்மாவை மதிப்பது தான் ஆத்ம சம்மான
மாகும். தேகமதிப்பு புண்ணியமெனும் கோவிலின் எதிர்
முனை. அது நாசத்திற்குக் கொண்டு சேர்க்கும் குறுகிய பாதை.
எவ்வேலையாயினும் செய்ய நீங்கள் கைகளை நீட்டித் தயாரா
யிருக்கும்போது, கவுரவமான உத்தியோகங்களும், மதிப்
புள்ள தொழில்களும் மனப்பூர்வமாய்த் தங்கள் கைகளை

121079

நீட்டி உங்களைப் பெற்றுக்கொள்ளுமே. இதுதான் பிரமாணம். தொழிலின் அகத்திலுள்ள பிரமத்தினின்று நீங்கள் விலகுவீராயின், அவருடைய அனுக்கிரகம் உங்களுக்கு உண்டாகாது. பிறருடைய புகழ்ச்சியிலும், கண்டனையிலும் நீங்கள் நம்பவேண்டாம். அவைகளெல்லாம் உங்களை வழி தப்பி நடக்கச் செய்து, வஞ்சித்து விடும். நீங்கள் அடைய விரும்பும் மோக்ஷம் உங்களிலேயே யிருக்கின்றது. சுகம் கொடுக்கிற தெனப்படும், வெளி விஷயங்களில் நீங்கள் மூழ்குவீராயின், அழுக்கடைந்த, நீதிதவறிய சோரர்களாய் விடுகிறீர்கள். வெளிசுகங்களை நோக்கி "பின்னாலே போ, பேயே, உன்கைகளின்று நாங்கள் ஒன்றும் பெற்றுக்கொள்ளோம்" என்று சொல்லிவிடுங்கள். எல்லாமகிழ்ச்சிக்கும் ஊற்று நீங்களன்றோ?

புறா விருக்ஷத்தின் உயர்ந்தகிளைகளில் உட்கார்ந்திருக்கும்போது, ரமணீயமான கீதங்களைத் தானாகவே பாடும். உங்கள் மனத்தை ஆத்மாவில் இருத்துங்கள், அப்போது அதினின்று இன்பகரமான நாதகீதங்கள்—பிரயாசையின்றி—வலிய உண்டாகும் (உதிக்கும்.)

உங்கள் தெய்வத்துவம் செய்து முடிக்கத்தக்க ஓர் காரியமன்று. தன்னையறிதல். அடையத்தக்க ஓர் பதார்த்தமன்று. தெய்வத்துவத்தைப்பெற நீங்கள் செய்ய வேண்டிய காரியம் ஒன்றுமேயில்லை. உங்களைச் சுற்றிலுமுள்ள ஆசைகளெனும் இருளான புழுக்கூடுகளை சிருஷ்டிக்க நீங்கள் செய்திருப்பதை அழிக்க வேண்டியவர்களாய் மாத்திரம் இருக்கிறீர்கள். பயப்படேல் "நீங்கள் குற்றமற்றவர்கள். உங்களுக்குப் பந்தமாகக்காணப்படுவதும் கூட, உங்களுக்கிருக்கும் சுவாதீனத்தினால் எற்பட்டதுதான். நீங்கள் அழைத்தாலன்றி உங்களை யாதொரு தீங்கும் அணுகாது. கத்தி உங்களை வெட்டக்கூடுமென்று நீங்கள் நினைத்தாலன்றி, அது உங்களை வெட்ட முடியாது. பூட்டுகளையும், சங்கிலிகளையும்

ஆபரணமாக நீங்கள் விரும்பவேண்டிய அவசியமில்லையே. வீண் மனோராஜ்யங்களை உதறுங்கள். முரட்டுத் தனத்தை யெல்லாம் சாம்பராக்கி விடுங்கள். அப்போது உங்கள் பாத மலர்களை கழற்றும் சுதந்தரம் பெற நன்றியறிதலோடும் ஆவலில்லாதார் யார் இருப்பார்கள்? உங்கள் தெய்வத்து வத்தை உறுதிப்படுத்துங்கள். இச்சிறிய அகங்காரத்தை ஒருபோதும் இல்லாததுபோல் மறந்துவிடுங்கள்.

ஓர் சிறு நீர்க்குமிழி, தான் உடைந்ததுவும், முழுசமுத்திரமும் அதாகிவிடுகிறதன்றோ? சமஸ்தமும் நீங்களே, சர்வமும் நீங்களே. நீங்கள் முடிவற்றவர்கள். உங்களுக்கு இயல்பாயுள்ள மாட்சிமையில் ஜொலித்துக்கொண்டிருங்கள். ஓ! பரிபூரண ஏகத்வமானவர்களே! உங்களுக்கு கடமையில்லை. கர்மமில்லை. நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றுமேயில்லை. பிரகிருதி தேவி உங்களுக்குத் தொண்டுபுரியும் பொருட்டு அபார சக்தியுடன் காத்திருக்கிறாள். உங்களை வணங்கிப் போற்றி வழிபாடு செய்யும் நற்பாக்கியத்தை யடையும்படிக்கு பூமாதேவி நட்சத்திரங்களுக்கு உபதேசிக்கின்றாள். பிரகிருதி தேவியின் சக்திகளெல்லாம் உங்கள் முன் முழந்தாள்படியிட்டு உங்களை வணங்குகிறதை தயவுசெய்து கவனிப்பீர்களாக!

R
M16
121079

முற்றிற்று.

கோயமுத்தூர் இம்மானுவேல் பிரஸில், பதிப்பிக்கப்பட்டது.

## "மின்சாரரசம்."

இதில் ஒரு துளி தண்ணீரில் விட்டு சாப்பிட்டால் சகலரோகங்களையும் அரைமணி நேரத்தில் நிச்சயமாய் கண்டிக்கிறது. மேலுக்குத் தடவினால், சகல வலிகளையும், ரணங்களையும் சொஸ்தப்படுத்துகிறது.

புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2—0—0

தபால் செலவு ... 0—4—0

## "முக்திபெறும் ரகசியம்"

இந்நூலில் மனிதனுடைய பிறப்பும், சக்தியும் தெளிவாய் சொல்லப்பட்டிருக்கிறது.

விலை அணா 8.

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

P. வரதராஜுலு நாயுடு,
ஆயுர்வேத தர்ம வைத்தியசாலை
திருப்பூர்